விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 20 ஞாயிற்றுக்கிழமை (03.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 105

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரமா?

# எந்தவொரு அமைச்சரும் வடக்கே செல்ல முடியாது?

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

(கொழும்பு) மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் எந்தவொரு அமைச்சரும் வடக்கே செல்ல முடியாது போகலாம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குறிப்பாக மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்கள் வடக்கே செல்லும் போது பலாலி விமானத்தளத்தை விட்டே வெளியேற முடியாத நிலையேற்படலாம் என்றும் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## உலகக்கிண்ணம் இந்தியா வசம்



(மும்பை)

பத்தாவது உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணியை 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்று இந்திய அணி சம்பியனானது.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 274 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 277 ஓட்டங்களைக்குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

(இப்போட்டி தொடர்பான விரிவான செய்தி 19ஆம் பக்கத்தில்)

### ஜனாதிபதியின் பயணத் தகவலை சேகரித்த புலி உறுப்பினர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் விமானப்பயணங்கள் தொடர்பில் தகவல் சேகரித்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் ஐரோப்பிய நாடொன்றில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் 2001ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் கட்டுநாயக்க விமான நிலையம் மீது மேற்கொண்ட தாக்குதலிலும் பங்கேற்றவர் என்று தெரியவந்துள்ளது. அதன்பின் அவர் ஐரோப்பிய நாடொன்றுக் குத் தப்பிச்சென்று தலைமறைவாக வாழ்ந்துள்ளார்.

கமல் என்ற பெயர் கொண்ட பிரஸ்தாப நபர் யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அண்மைக்காலமாக சுவிட் (20ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய ரசிகர்கள் ஆரவாரம்

## வெள்ளை வானில் சென்றோர் தாக்குதல்!

### யாழ். குடாநாட்டில் பரவலாகச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதையடுத்து யாழ். குடாநாட்டில் பரவலாக இந்திய அணியின் ரசிகர்கள் வெடி கொளுத்திக் கொண்டாடினர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி என பரவலாக கொண்டாட்டங்கள் இடம் பெற்றன. இதனைப் பொறுத்துக்கொள்ளாத சிலர் வெள்ளைவான் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் சென்று வெற்றியைக் கொண்டாடியவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றிரவு (20ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா.அலுவலகத்தை முற்றுகையிட்டால்

## எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?

### கொழும்பில் ஒத்திகை நிகழ்வு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகம் முற்றுகையிடப்பட்டால் எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்து அந்த அலுவலகத்தின் அதிகாரிகள் ஒத்திகை ஒன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது.

வன்னிப் போரின் போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தனது அறிக்கையை எந்த நேரத்திலும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் (20ஆம் பக்கம் பார்க்க)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
அனைவருக்குமான நவீன அழகிய தெரிவுகளுக்கு...

நல்லூர்
சரவணா ரெக்ஸ்



இல. 526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.
இல. 770, 772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-2797)

# உலகத்தமிழர் பேரவையுடன் றொபேட் ஓ பிளேக் சந்திப்பு!

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிரிவுக்கான உதவிச் செயலர் றொபேட் ஓ பிளேக்குடன் உலகத் தமிழர் பேரவை மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவை ஆகியன நடத்திய சந்திப்பு இலங்கை அரசுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்றுக்கு இலங்கை அரசாங்கத்தை சம்மதிக்க வைப்பதற்கு அழுத்தம் கொடுப்பதற்கான தந்திரோபாயம் குறித்து கலந்துரையாடப்பட்டிருக் (20ஆம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் சிங்கர் மடிக்கணனிகள்




* 2010 சாதாரன தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு 10% விசேட விலைக்கழிவு
இச்சலுகை மார்ச் 31 வரை மட்டுமே
* பல்கலைக்கழக மாணவர்களுக்கு 12 000 ரூபா வரை விசேட விலைக்கழிவு
இவ் அனைத்துச் சலுகைகளையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் 021 222 4389
கே.கே.எஸ் வீதி சுன்னாகம் 021 224 0555
அலடிச் சந்தி மானிப்பாய் 021 225 5343
பருத்தித்துறை வீதி நெல்லியடி 021 226 4937
கண்டி வீதி சாவகச்சேரி 0779508957

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மக்களின் ஜனநாயகத் தீர்ப்புகள் மதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்

## இரா.சம்பந்தன் அறிக்கை



(கொழும்பு)

தமிழ் மக்களின் ஜனநாயகத் தீர்ப்புகள் மதிக்கப்படுவதுடன் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிலைத்து நிற்கக்கூடியதும் நியாயமானதுமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ் மக்களும் தமிழ் அரசியல் சக்திகளும் ஐக்கியப்பட்டுத் திடமாக உறுதியை எடுக்க வேண்டும் எனவும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்கில் அண்மையில் தமிழ் மக்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்ற உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களில் நடத்தப்பட்ட தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக் கட்சி நம்பிக்கை தருகின்ற வெற்றியைப் பெற்றுள்ளதுடன் அதிகாரத்தையும் கைப்பற்றியுள்ளது.

ஏப்ரல் 2010 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளதுடன் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நிலைத்து நிற்கக்கூடியதும் நியாயமானதுமான அரசியல் தீர்வு என்ற தமிழ் மக்களின் ஜனநாயகத் தீர்ப்பை ஐயத்திற்கு இடமின்றி எடுத்துக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல், அடிப்படை மற்றும் மனித உரிமைகளை மீறும் சர்வாதிகார மற்றும் எதேச்சாதிகாரமான ஆட்சி நிச்சயமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கான நேரம் வந்து விட்டது என்றே நாம் நினைக்கின்றோம்.

ஏற்றுக்கொள்ளக்கூடியதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்ற நம்பிக்கையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் சார்பாக ஒரு செயற்பாட்டில் தற்போது ஈடுபட்டுள்ளது. அவ்வாறான ஏற்றுக் கொள்ளக்கூடியதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்ற உறுதிப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ளது.

இந்த நோக்கத்தை அடைவதற்காக தமிழ் மக்களும் தமிழ் அரசியல் அமைப்பிற்குள் வருகின்ற அனைத்து அரசியல் சக்திகளும் ஐக்கியப்பட்டு திடமான உறுதியை எடுக்க வேண்டும். தமிழ் மக்கள் வழங்கிய ஜனநாயக தீர்ப்பின் வலிமை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# குண்டுகள் பொருத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் கண்டுபிடிப்பு

இரண்டு குண்டுகள் பொருத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றைக் கண்டுபிடித்துள்ள படையினர் விசேட அதிரடிப் படையினர் மூலம் குண்டுகளைச் செயலிழக்கச் செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தை அண்மித்த சியம்பலாண்டுவ பிரதேசத்தின் தலங்கம, புத்தகம கிராமத்தில் வைத்தே குறித்த மோட்டார் சைக்கிள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளின் பாத மறைப்புப் பகுதியில் குண்டுகள் இரண்டு பொருத்தப்பட்டிருந்தது தொடர்பாகக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்துள்ளனர்.

அதன்பின் விசேட அதிரடிப்படையினர் ஸ்தலத்துக்கு வரவழைக்கப்பட்டு குண்டுகள் இரண்டும் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. (ச-5)

# விமானத்தின் கூரையில் திடீர் துவாரம் அவசரமாக தரையிறக்கப்பட்டது

(கலிபோர்னியா)

118 பயணிகளுடன் வானில் பறந்துகொண்டிருந்த விமானமொன்றின் கூரையில் திடீரென துவாரம் ஏற்பட்டதால் அவ்விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சௌத்வெஸ்ட் எயார்லைன்ஸைச் சேர்ந்த இவ்விமானம் கலிபோர்னியா மாநிலத்தின் சாக்ரமென்டோ நகரிலிருந்து புறப்பட்டு சிறிது நேரத்தில் துப்பாக்கி வெடியோசை போன்ற சத்தம் கேட்டதாக விமானத்தில் பயணம் செய்த பிரெண்டா ரீஸ் எனும் பெண் தெரிவித்துள்ளார்.

விமானத்தின் கூரையில் திடீரென பாரிய துவாரம் ஏற்பட்டது. அதற்கூடாக வானத்தைப் பார்க்க முடிந்தது என அவர் கூறினார்.

விமானத்திற்குள் காற்றழுத்தம் குறைந்ததினால் ஒட்சிசன் முகமூடிகள் இறக்கப்பட்டன. பின்னர் இவ்விமர்னம் இராணுவத் தளமொன்றில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இச்சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தையடுத்து விமானத்தை 36 ஆயிரம் அடி உயரத்திலிருந்து 11 ஆயிரம் அடி உயரத்திற்கு விமானி இறக்கியதாக அமெரிக்க சமஷ்டி வான்போக்குவரத்து நிர்வாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விமானத்தில் திடீரென துவாரம் ஏற்பட்டமைக்கான காரணம் குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. (ச-5)

# தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளையை புனரமைப்பதற்கு தீர்மானம்!

இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளையை புனரமைப்பதற்கான பூர்வாங்கக் கூட்டம் கொழும்பு வெள்ளவத்தையில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான மாட்டீன் கணபதிப்பிள்ளை (மாஸ்டர்), ஆ.ரகுபதி பால சிறிதரன், டிவோட்டோ, சி.சிவலோகநாதன் உட்பட சுமார் 15 பேர் கலந்துகொண்டனர்.

கொழும்பு கிளையின் புனரமைப்பு மற்றும் உறுப்பினர்களை இணைத்துக்கொள்வது போன்ற பணிகளை ஊடகவியலாளர் ஒருவரிடம் ஒப்படைப்பதென இக்கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டதாகத் தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி தந்தை செல்வாவின் நினைவு தினத்தை கொழும்பில் நடத்துவது எனவும், தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் அரசியல் எழுச்சிக் கருத்தரங்குகளை கொழும்பில் நடத்துவது என்றும் இக்கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டது.

கொழும்பு கிளை ஊடாக தமிழர் பிரச்சினையை இராஜதந்திர மட்டத்தில் கையாள்வதற்கு நடவடிக்கை எடுப்பதென முடிபு செய்யப்பட்டதாகவும் தென்னிலங்கையில் தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளை கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக இலங்கை தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

# செம்பியன் வீதியூடான பயணத்துக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு செம்பியன் வீதியிலுள்ள பாலம் சேதமடைந்துள்ளதால் அதனூடாக கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இரவு நேரங்களில் பயணிப்போர் அருகிலுள்ள வாய்க்காலுக்குள் தவறி விழும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இப்பாலத்தைத் திருத்துவதற்கு உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் 2001ஆம் ஆண்டு முதல்
வெளியிட்ட புத்தகங்கள் விற்பனைக்கு

ஒரு புத்தக விலை 250 ரூபாய்
ஊடகவியலை பாடமாகப் படிப்போர் 200 ரூபாயிற்கு நிலையத்தில் பெறலாம்.
புத்தகங்களை அன்னை புத்தகசாலை நவீன சந்தை - பூபாலசிங்கம் கொழும்பு- ஜெயா புத்தகசாலை கொழும்பு இலும் பெறலாம்.

1) பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம் (ஆண்டு 2001)
வடகிழக்கு மாகாண விருது பெற்றது
இலங்கை இலக்கியப் பேரவை விருது பெற்றது

2)பத்திரிகை இயல் அடிப்படைகள் (ஆண்டு 2002)

3) மின்னியக்க பத்திரிகையில் ஓர் அறிமுகம் (ஆண்டு 2003)
இலங்கை அரச சாகித்திய விருது பெற்றது
இலங்கை இலக்கியப் பேரவை விருது பெற்றது.

4)ஊடக இயல் கலைச்சொல் அகராதி (ஆண்டு 2003)

5)ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமும் (ஆண்டு 2004)

6)செய்தித்தலைப்புக்கள் ஓர் அறிமுகம் (ஆண்டு 2005)
வடகிழக்கு மாகாண விருது பெற்றது

7)அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல் (ஆண்டு 2006)

8)சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம் (ஆண்டு 2007)
அச்சில்

9)ஏடு இட்டோர் இயல் ஓர் அறிமுகம் (ஆண்டு 2011)

Bishop Savundram Media Centre,
891, Hospital Road, Jaffna

(சி-2864)

## Study & Work in UK and Canada

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

## ஸ்ரைல் பார்க்

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய அழகிய ஆடை தெரிவுகளுக்கு நாட வேண்டிய இடம்.





ஸ்ரைல் பார்க்
171, K.K.S. ROAD, JAFFNA
(சி-2863)

## தேவை

ஓய்வூதியர் இருவருள்ள வீடொன்றில் தங்கியிருந்து சமையல் வேலையுடன் வீட்டு வேலைகளும் செய்யக்கூடிய பொறுப்புணர்வு மிக்க நற்பண்புள்ள பெண் / ஆண் தேவை.
தொடர்பு: 0774374241
(4258)

## காணி விற்பனைக்கு உண்டு

மானிப்பாய் சந்தியில் இருந்து 150 m தொலைவில் சுந்தர்ஸன் அருகாமையில் உள்ள 'கலைக்' வீதியில் 2 பரப்பு காணியும் நவாலி வடக்கு அட்டகிரி பாடசாலைக்கு அருகில் வீட்டுடன் கூடிய 6 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.No.: 077-6367209, 021-4908148
(4291)

## காணி விற்பனைக்கு

கோயில்வீதி கொக்குவிலிலுள்ள 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகட்கு:0777543682
(4284)

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் பிரதான வீதியில் 16 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.(பயன்தரும் மரங்களுடன்)
தொடர்பு: Justin 0779485703
(4285)

## மகளிருக்கான விடுமுறைக்கால 12 நாள் வகுப்புகள்

- வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
- வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
- இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

**கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (HAIR DRESSING & STYLING)**

50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 வித முடி வெட்டுதல். தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி, Perming தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

✲ Facials, கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் Waxing, எவ்வித சிரமமுமின்றி தமக்குத்தாமே Facial செய்வதற்கான பயிற்சி.

இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்,
மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✲ தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 09-04-2011 சனி காலை 10.00 மணி**

கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்
☞ மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

## வாடகைக்கு

நாவலர் வீதியில், கஸ்தூரியார் வீதிக்கு அண்மையில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0750422046
(4287)

## விற்பனைக்கு

- LG Brand ,12 BTU, Air Condition விற்பனைக்கு உண்டு.
- பழைய ஓடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0750422046
(4287)


## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு மைத்துனர்
அமரர் நாகேந்திரம் சிவகுருநாதன் (செட்டியார்)



அவர்களின் திடீர் மறைவால் துயர் உற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

பிரிவால் துயருறும்,
க.இராசரத்தினம் குடும்பத்தினர்.
(4292)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட 1ம் வருட மாணவன் த.ஜெயப்பிரதாப்பின் தந்தையார்

### செல்லத்துரை தர்மபாலன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விஞ்ஞானபீடம்
36ஆம் அணி (1ம் வருடம்)
யாழ்.பல்கலைக்கழகம்.
(4289)

## 50வது பிறந்த நாள் நல் வாழ்த்துக்கள்



03.04.2011 ஞாயிற்றுக்கிழமை தமது 50வது பிறந்த நாளைக் கொண்டாடும் நயினாதீவு நாகதீப ரஜமகா விகாரை விகாராதிபதி சங்கைக்குரிய

**நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ தேரோ**

அவர்கள் புத்தபகவானின் அருளினால் மக்களுக்கு சிறந்த சேவை செய்து ஆன்மீகம் சிறக்க பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.ச.தருமராசா அவர்கள்
ஸ்ரீ நாகராணி மற்றும் ஞானவைரவர்
நயினாதீவு மோட்டார்படகு உரிமையாளர்
(சி-2861)

# கடற்படையினரை கண்டுபிடிப்பதற்கு இந்தியாவின் உதவியை நாடியுள்ளோம்

## இலங்கை கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு கடற்பரப்பில் காணா மல் போன 4 கடற்படை வீரர்கள் தொடர்பாக எந்த விதமான தகவலும் இல்லை என்றும் இவர்களை கண்டுபிடிக்க இந்தியாவின் உதவியை நாடியுள்ளோம் என்றும் இலங்கை கடற்படை பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ள தாவது,

காணாமல் போன கடற்படைவீரர் படகு எவ்விதமான சேதமும் இன்றி வெற்றி லைக் கேணி கரையோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த நான்கு கடற்படை வீரர்களும் மர்மமான முறையில் படகுடன் காணாமல் போயிருந்தனர்.

சம்பவம் நடைபெற்று இரண்டு நாட்களின் பின் படகு மட்டும் வெற்றிலைக் கேணி கரையோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக முல்லைத் தீவை அண்டிய கரையோரப் பிரதேசங்களில் விசாரணைகளிலும் தேடுதல் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடு பட் டுள்ளனர். அத்தோடு காணாமல் போயுள்ள நான்கு கடற்படை வீரர்களையும் கண்டு பிடிக்க இந்திய கடற்படையினரிடம் உதவி கோரப்பட்டுள்ளது என்று இலங்கை கடற் படை பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ண குல சூரிய கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## ஸ்கிறபிள் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட ஸ்கிறபிள் சங்கத்தினால் ஆங்கில அறிவினை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் ஸ்கிறபிள் வீரர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் சேவை மனப்பாங்குடன் நடத்தப்பட்டு வரும் 2 ஆவது வடமாகாண ஸ்கிறபிள் (மட்டுப்படுத்தப்பட்ட / பகிரங்க) சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித்தினம் எதிர் வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஸ்கிறபிள் விளையாட்டில் அனுபவமுள்ளவர்களும் முன்னர் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றியவர்களும் பங்குபற்ற விரும்பினால் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. க. பொன்னம்பலத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இணுவில் பொ.நூலக ச.ச. நிலையத்தால் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் புனருத்தாரண ஒன்பதாம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**கரம்**

*மகளிர் ஒற்றையர்*

எஸ்.வித்தியாராணி, எம்.எஸ்.சகமா, எல்.யதுகலா

*மகளிர் இரட்டையர்*

முதலாமிடம் இருவர்-ஜெ.ஜெயகாந்தன், எஸ்.வித்தியாரணி, இரண்டாமிடம் இருவர்-எல்.யதுகுலா, ஜெ.மோகன்

*ஆண்கள் ஒற்றையர்*

ஆர்.பாலமுரளி, எஸ்.செந்தூரன்,-ஜெ.ஜெயகாந்தன்

*ஆண்கள் இரட்டையர்*

ஆர்.பாலமுரளி-ஜெ.ஜெயகாந்தன், எஸ்.செந்தூரன்-எஸ்.பிரதீப், ரி.காந்தன்-ரி.அனுராம்

**சதுரங்கம்**

*பெண்கள்*

கு.மாதுமை( யா/மெதடிஸ்த உயர்தர பாடசாலை), தி.மிதுஷா( யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

*ஆண்கள்*

ஜே.திறோஜன்(யா/இந்துக் கல்லூரி), அ.ஜஸ்ரைன்(யா/இந்துக்கல்லூரி)

**மரதன் ஓட்டம்**

ம.மயூரன், ந.சுகந்தன், ர.லக்ஷன்

**துடுப்பாட்டம்**

காந்தி நியூஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகம், திருக்குமரன் விளையாட்டுக்கழகம்

**பொது அறிவு, பொது உளச்சார்பு போட்டிப்பரீட்சை முடிவுகள்**

*ஆரம்பப்பிரிவு*

மூவர் முதலாமிடம்-க.நவநீதன், த.அபிஷேக் ( யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி) ,க.விதுர்ஷன்(யா/உடுவில் மகளிர் கல்லூரி), ஞா.பவித்தா( ஏ.ரி.சி), ஜீ.வினுசியா( யா/இராமநாதன் கல்லூரி)

*கீழ்ப்பிரிவு*

வி.நிதுர்சினி,பி.வினுஜா( யா/உடுவில் மகளிர் கல்லூரி),மூன்றாமிடம் இருவர்-பா.நிரோஜினி(ஏ.ரி.சி), க.தேவஜனா(ஏ.ரி.சி)

*மத்திய பிரிவு*

வி.சுஜீவன்,பி.வத்சாங்கன்,தி.யதுர்ஷன்(ஏ.ரி.சி)

*மேற்பிரிவு*

சு.சுதர்சன்( யா/இராமநாதன் கல்லூரி), ஸ்ரீ.அம்பிகா(யா/இணுவில் பொது நூலகம்) ச.மேரிகனுகா(யா/இராமநாதன் கல்லூரி) (ஸ்ரீ-2)

# வேலையற்ற இளைஞர், யுவதிகளின் விபரம் திரட்டல்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் படித்து விட்டு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் தொடர்பான விபரங்கள் கிராம அலுவலர்களினால் திரட்டப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நல்லூரிலுள்ள கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளின் முழுப்பெயர், முகவரி, குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வித் தகைமைகள் பதியப்பட்டு வருகின்றன.

இதுவரையில் பதிவுகளை மேற்கொள்ளாத 18 வயதுக்கு மேற்பட்ட நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு நல்லூர் பிரதேசசெயலகம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கையின் வீதி அபிவிருத்திக்கு சீனா 500 மில்லியன் டொலர் உதவி

இலங்கையில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சீனா 500 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, இலங்கையில் வீதி மற்றும் நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்கு சீனாவின் அபிவிருத்தி வங்கி 500 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. இதற்கான உடன்பாட்டில் சீனாவின் அபிவிருத்தி வங்கியும், இலங்கையின் நிதி அமைச்சகமும் கையொப்பமிட்டுள்ளன.

அதேசமயம் 1.98 பில்லியன் ரூபாய்களை (17.6 மில்லியன் டொலர்கள்) இலங்கையின் நகர மற்றும் கிராம அபி விருத்திக்கு வழங்கவுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்கு என உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு 38 மில்லியன் டொலர் உதவிகளையும், யப்பான் 468 மில்லியன் ரூபாய்களையும் வழங்கியுள்ளன.

வருமானம் குறைந்த விவசாயிகளுக்கு வழங்குவதற்கென 820 இரு சக்கர உழவு இயந்திரங்களையும் 50 நான்கு சக்கர உழவு இயந்திரங்களையும் யப்பான் வழங்கியுள்ளது.

மேலும் வவுனியா - கிளிநொச்சிக்கான மின்சார வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் யப்பான் அரசு ஆயிரத்து 891 மில்லியன் ரூபாய்களையும் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறப்பட்ட உதவிகளில் சீனாவின் உதவியை தவிர ஏனைய உதவி கள் அனைத்தும் போரினால் பாதிக்கப் பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்கே வழங்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# பல்கலை. மாணவர்கள் மீது அடக்குமுறை

## ஐ.நா.வை தலையிடக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பல்கலைக்கழக மாணவர் கள் மீது இடம்பெறுவதாகக் கூறப்படும் அடக்குமுறைக்கு எதிராக ஐ.நா.தலையிட வேண்டுமென அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கடிதமொன்றை நேற்று முன்தினம் கையளித்தது.

ஐ.நா.வை தலையிடக் கோரவும் மாணவர்கள் மீதான தொந்தரவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இக்கடிதத்தை கையளித்ததாக மேற்படி ஒன்றியத் தின் தலைவர் சஞ்சீவ பண் டார தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் உயர்கல்வித்துறை அதிகாரிகளாலும் அரசாங்கத்தினாலும் அடக்குமுறைக்குள்ளாக்கப்படுவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொய்க்குற்றச்சாட்டு காரணமாக சுமார் 300 மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



# பாதையை விட்டு விலகி வீட்டின் கூரையின் மீது ஏறிய பஸ்



வெலிமடையிலிருந்து கலபொடவுக்குச் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்று நேற்று முன்தினம் காலை எட்டம்பிட்டிய பிரதேசத் தில் பாதையைவிட்டு விலகி சரிந்து வீடொன்றின் கூரை மீது விழுந்துள்ளது.

இச்சம்பவத்தில் 10 பேர் காயமடைந்துள் ளனர். இவர்கள் எட்டம்பிட்டிய வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்க ளில் ஆபத்தான நிலையிலிருந்த 3 பேர் பின்னர் பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டனர்.

விபத்து இடம்பெற்றபோது பேருந்தில் 33 பயணிகள் இருந்ததாக பொலிஸார் தெரிவித் தனர். அவ்வேளை வீட்டில் பெண்ணொருவர் மாத்திரமே இருந்ததாகவும் அவர் காயமெதுவு மின்றி தப்பியுள்ளார். எனினும் பேருந்தும் வீடும் பலத்த சேதமடை ந்துள்ளன. (ஸ்ரீ-2)

# அரசாங்க வைத்தியசாலைகளில் தனியார் விடுதிகளை நிர்மாணிக்க திட்டம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



அரச வைத்தியசாலைகளில் கட்டணம் அறவிட்டு சேவை வழங்கும் விடுதி கட்டத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனியார் வைத்தியசாலைகள் பொதுமக்க ளிடம் அசாதா ரணமான முறையில் கட்ட ணங்களை அறவிடுவதுடன் அவ ற்றுக்கென நிலையான கட்டண முறையொன்று இல்லை.

இதனால் அரச வைத்தியசாலைகளில் தனியார் விடுதி களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ள இந்தமுறை இவ்வாண்டு இறுதிக்குள் நாடு முழுவதிலும் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் செயற்படுத் தப்படும்.

இதற்கென தனியானதொரு புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படும் என்றும் இதன் முதற்கட்ட நிகழ்வு அம்பாறை வைத்தியசாலையிலிருந்து மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்

புனருத்தாரண ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா

பரிசில் வழங்கல் வைபவம்–2011

இடம்:- இணுவில் பொதுநூலக கலாசார மண்டபம்

காலம்:- 03.04.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணி

தலைவர்
சொ.ஹரிசங்கர்
பிரதம விருந்தினர்
திருமதி மதுமதி வசந்தகுமார்
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)
தொடக்க உரையை நூலகபோசகரும் பேராசிரியருமான
க. தேவராஜா அவர்கள் ஆற்றுவார்
சிறப்பு விருந்தினர்கள்
செல்வி ஞானலோஜினி சிவலிங்கம்
(சட்டத்தரணி)
திரு.வி.கலைநேசன்
(உப அதிபர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)
கௌரவ விருந்தினர்கள்
திரு.ந.புஸ்பராசா
(ஆசிரியர், யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்)
திரு.சி.கோபிகிருஷ்னா (இலண்டன்)

பரிசில் வழங்கல் வைபவம் இடம்பெறுவதால் வெற்றியீட்டியவர்கள் தவறாது கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில்
பொதுநூலகம் சனசமூக நிலையம்

(சி-2854)


# ஓடும் பேருந்தில் நூல் வெளியீடு

நெடுந்தீவு முகிலனின் "பயணி கள் கவனத்திற்கு" எனும் எட்டாவது நூல் வெளியீடு எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிக்கு வவுனியா நகரசபை முன்றலில் இருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணம் வந்தடையும் பேருந் தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக தென்னிந்திய திரைப்படத் தயா ரிப்பாளரும் சட்ட ஆலோசகருமான க. செவ்வேள் கலந்து சிறப்பிக்கவுள் ள்ளார்.

வவுனியா நகரசபை உபதலை வர் ஆசிரியர் எம்.எம்.ரதன் இந்நி கழ்வை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

விசேட அதிதியாக அகில இல ங்கை கலை இலக்கிய பேரவைத் தலைவர் கவிஞர் பொன்.சுகந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

முதற்பிரதியை மன்னார் கல்வி ஊக்குவிப்பு மைய இணைப்பாள ரும் வர்த்தக சங்க செயலாளரு மான கந்தையா சந்திரகாந்தன் பெறவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இதழியல் பயிற்று நர் கவிஞர். தீபச் செல்வன் நிகழ்த் தவுள்ளார். (ஸ்ரீ-3)

# மாலைதீவு தீவிரவாத அமைப்பின் தலைவர் இலங்கையில் கைது

(கொழும்பு)

மாலைதீவில் இடம்பெற்ற குண்டுத் தாக்கு தல் சம்பவத்துடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்பின் தலைவரான மொஹமட் இக் பால் என்பவரை கட்டுநாயக்க விமான நிலை யத்தில் வைத்து இலங்கை புலனாய்வுப் பிரி வினர் கைது செய்துள்ளனர்.

உலகக் கிண்ணப்போட்டிகள் நடைபெற்ற போது இவர் கராச்சியில் இருந்து இலங்கை வந்திருந்தார். மீண்டும் மாலைதீவு புறப் பட்டுச் செல்லவிருந்தபோதே கைது செய்யப் பட்டுள்ளார்.

சர்வதேச பொலிஸார் இவர் தேடப்படும் நபர் என அறிவித்து அவரது புகைப்படம் மற்றும் பிடிவிராந்து என்பவற்றை விமான நிலைய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குவழ ங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)







"எடிசெலாட்" விற்பனை மேம்பாட்டு அதிகாரி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது

- வல்வெட்டித்துறை
- முல்லைத்தீவு
- பருத்தித்துறை
- கொடிகாமம்
- ஊர்காவற்றுறை
- காரைநகர்
- கோப்பாய்
- திருநெல்வேலி
- மானிப்பாய்



- நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவரா?
- நுகர்வோருடன் பேசி விற்பனையை மேம்படுத்த விருப்பமுள்ளவரா?
- தொழிற் பயிற்சிகள், சலுகைகள் பெற ஆர்வமுள்ளவரா?
- இலங்கையின் முதற்தரமான தொலைபேசி நிறுவனத்தில் பணியாற்றி, வாழ்வில் முன்னேற விருப்பமுள்ளவரா?

அப்படியாயின் நாங்கள் தேடுபவர் நீங்கள் தான்!

விண்ணப்பதாரிகளுக்கு 01.04.2011-15.04.2011 வரை நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

சம்பளத்திட்டம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

❖ சுயமாகத் தயாரித்த சுயவிபரக் கோவையுடன் (BIO-DATA) கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.

விபரங்களுக்கு
Mr.H.Mohamed: 07 22 465478
விரைந்து
R&R TELECOM JAFFNA (PVT) LTD,
127, MPCS BUILDING,
K.K.S. ROAD, JAFFNA. T.P.: 021-222 1644

(சி-2842)

## மூன்று நாட்களில் சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை



இல.56 கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த கே.விமலேந்திரன் என்பவரால் கடந்த 22ஆம்திகதி பெயர், விலாசம்,வயதுஎதுவும் தெரியாத நோயாளி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் 27 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் கடந்த 26 ஆம் திகதி அன்று இறந்துள்ளார்.

இவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரையில் எவரும் உரிமை கோராது இருப்பதால் உரித்துடையோர் மூன்று நாட்களுக்குள் பொறுப்பேற்கும் படி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# எமது விடுதலை தொடர்பில் ஆக்கபூர்வமான முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவும்

## தமிழ் அரசியல் கைதிகள் வினோ எம்.பி.யிடம் கோரிக்கை

வவுனியா சிறைச்சாலைக்கு கடந்த 3 ஆம் திகதி சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கைதிகளை பார்வையிடுவதற்கு முன்னர் வவுனியாவுக்கு வருகை தந்திருந்த அநுராதபுரம் பிராந்திய சிறைச்சாலை அத்தியட்சகர் சந்திரசிறியை வவுனியாவில் உள்ள அலுவலகத்தில் சந்தித்து தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை சம்பந்தமாகவும் சிறைச்சாலையில் காணப்படும் குறைபாடுகள் சம்பந்தமாகவும் கேட்டறிந்து கொண்டார்.

பின்னர் சிறைச்சாலை வளாகத்துக்குள் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் அரசியல் கைதிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது கைதிகள் அங்குள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதுடன் தமது விடுதலை சம்பந்தமாக ஆக்க பூர்வமான முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.தீர்க்கப்படாமல் நீடித்துக் கொண்டு செல்லும் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணும் நோக்குடன் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருப்பதாகவும் உடனடி பிரச்சினைக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் தடுப்பு முகாம்களிலுள்ள முன்னாள் போராளிகளின் விடுதலைக்கும் பேச்சுவார்த்தைகளின் போது முன்னுரிமையளிப்பதாகவும் கைதிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்ல தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவர்களை பிணையில் விடுவிக்கவும்சம்பந்தப்பட்டசகல மட்டங்களுக்கும் அழுத்தம் கொடுக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும்பாராளுமன்ற உறுப்பினர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். சிறைச்சாலையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய அரசியல் கைதிகள் மக்கள் பிரதிநிதிகள் மாதத்தில் ஒருதடவையேனும் வந்து தம்மை பார்வையிட்டால் மனரீதியில் தாம் ஆறுதலடைய முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மே மாதத்திற்குப் பின்னர் தாம் பாரிய குடிநீர்ப்பிரச்சினையினை சந்திக்க நேரிடும் எனவும் வெப்ப காலத்துக்கு முன்னர் இப்பிரச்சினையைத் தீர்க்குமாறும் கோரியுள்ளனர்.

சாதாரண வைத்தியர்கள் மட்டுமே நோயாளர்களைப் பார்வையிடுகின்றனர். தோல், கண்,காது போன்ற விசேட வைத்திய நிபுணர்களின் தேவை அதிகம் உள்ளதாகவும் இல்லாவிட்டால் தாம் நிரந்தர நோயாளிகளாகி விடுவோம் எனவும் தமது அச்சத்தினை தெரியப்படுத்தியுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் தனது விஜயத்தின் போது தமிழ் அரசியல் கைதிகளின் நலனில் அக்கறை கொண்ட நலன்விரும்பிகளினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சில அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கியுள்ளார்.

(ஸ்ரீ-2)

## மணவாளர் பட்டமுறிப்பில் 294 பேர் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த இடம் பெயர்ந்த மக்களில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 294 பேர் நேற்று முன்தினம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மணவாளர் பட்டமுறிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மீள்குடிற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் மணவாளர் பட்டமுறிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் படிப்படியாக மீள் குடியேற்றப்படவுள்ளதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)


union assurance
Trust in your tomorrow, today.

வேலைவாய்ப்பு

Join us as an Insurance Adviser to experience what you hoped for...
රක්ෂණ උපදේශකයෙකු ලෙස අප හා අත්වැල් බැඳගන්නා ඔබගේ සිහිනයන් නිසැකවම අපි සැබෑ කරන්නෙමු...
உங்கள் நம்பிக்கைக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள காப்புறுதி ஆலோசகராக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.




இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு) இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
பதவி - 4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
பதவி-1
பதவி - 2 ← தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள் :-
- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர் , யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் .
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம் .
- திடசித்தம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- திங்கட்கிழமை - 04.04.2011
நேரம் :- மு.ப 9.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2841)

திருமதி ச.சுகன்யா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.பே: 077 3668851



தீர்த்தமாடி திருவருள் மழைபொழிந்தே அருள்வாயம்மா



இன்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு காரைநகர் அருள்மிகு கும்பநாயகி முத்துமாரியம்பாளின் தீர்த்தோற்சவமாகும்.

திருமஞ்சனமருள எழுந்தருளும் தேவி கும்ப நாயகியே
தேசம் வாழ பொலிந்தருள்வாயுன் கருணை மழைதனை
அருள்வடிவாய் அமர்ந்தருளும் அன்னை கும்பநாயகியே
ஆற்றாதழும் பிள்ளைக்கு அமுதம் அளிக்க எழுந்தருள்வாயம்மா
எழில் மருவிடும் காரைத்திருவூராரின் காவல் நாயகியே
இங்குள்ள பாவங்கள் போக்கிட தீர்த்தமாடியருள்வாயம்மா
பொழிலான கூந்தலும் பொற்கரத்தில் சூலமும் திருநுதலில் குங்குமமும்
பூலோக மாரியென கும்பத் தடாகத்தில் தீர்த்தமாட வருவாயம்மா!

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

தீர்த்தோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்:-

(சி-2853)

சரவணா ரெக்ஸ்



சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய தெரிவுகளில் முழு குடும்பத்துக்கும் ஏற்ற ஆடைகளைப் பெற்றுக்கொள்ள

நல்லூர் சரவணா ரெக்ஸ்

தனது இரண்டாவது கிளையான 770, 772, கே.கே.எஸ். வீதி (தட்டா தெரு சந்தி). யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கிளை I
326, 329, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 021 222 1723

கிளை II
770, 772, கே.கே.எஸ். வீதி, (தட்டா தெரு சந்தி) யாழ்ப்பாணம். 021 222 0421

# மக்களை கொன்ற குற்றத்திலிருந்து இலங்கை அரசு தப்பவே முடியாது

## நாடுகடந்த தமிழீழத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் செவ்வி



**நாடுகடந்த தமிழீழத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சண்டேலீடருக்கு அண்மையில் வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகின்றது. (ஆ-ர்)**

இனமுரண்பாடு இலங்கையில் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் நிறைவுபெறும் நிலையில், நாட்டில் குறிப்பாக வடக்கு கிழக்கில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் நிலைநாட்ட நிறையவே செய்யப்பட்டுள்ளதாக அரசு தெரிவிக்கிறது.

அவற்றுள் சர்வதேச தமிழ் சமூகத்துடன் பரஸ்பர இலாபம் தரக்கூடிய உறவினைக் கட்டியெழுப்புவதும் ஒன்று என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அது அப்படி இருக்க அரசின் இம்முயற்சிகள் பற்றிய எதிர்பார்ப்புகளுக்கு மாறாக ஜனாதிபதி ராஜபக்ஷ மீதும் வழக்குகள் பதியப்பட்டது உட்பட புலம் பெயர்ந்த மக்களின் செயற்பாடுகள் வேறு திசையிலேயே அமைந்திருக்கின்றன.

கடந்த ஆண்டு மே மாதம் உருவாக்கப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் இது பற்றிய தனது பார்வையையும் புலம் பெயர்ந்த மக்களின் ஏனைய கரிசனைகளையும் சண்டே லீடருக்கான மின்னஞ்சலூடான செவ்வியில் பகிர்ந்து கொண்டுள்ளார்.

**கேள்வி :- நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தற்போதைய வகிபாகம் என்ன?**

**பதில் :-** சிங்கள தலைவர்களின் ஒதுக்கிவைக்கும் கொள்கைகளினதும், நாட்டில் நிலைபெற்றுப் பரவியுள்ள இனத்துவேசத்தினதும் விளைவாக தமிழர் தேசம் இலங்கைத் தீவின் அரசியற்செயற்பாடுகளில் பங்குபற்றுவது நடைமுறையில் தடுக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் தமக்கான சுதந்திரமான நாடொன்றிலேயே சுதந்திரமாகவும் மானத்துடனும் வாழ முடியும் என்பதை குரூரமான அடக்குமுறையும், தொடர்ந்து ஒடுக்கப்படுதலும் தெளிவாக நிரூபித்துள்ளன. 1977இன் பொதுசன தேர்தலில் தமிழ்மக்கள் தமது விருப்பைத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தனர்.

இலங்கை அரசின் ஜனநாயக வழிமுறையிலமைந்த ஒரு செயற்பாட்டின் மூலமே தமிழரின் இந்த உறுதிப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. ஆயுதப்போராட்டம் தீவிரமாக ஆரம்பிப்பதற்கு நீண்டகாலத்துக்கு முன்னரே தமக்கான தனி நாட்டுக் கோரிக்கையை தமிழ்மக்கள் அமைதியான முறையில் வெளிப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பாக நோக்கப்பட வேண்டும். தமிழினம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தனியானதும் சுதந்திரமானதுமான இறைமையுள்ள நாடு ஒன்று மட்டுமே வழி வகுக்குமென்பதை முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்த அரசியற்களம் இல்லாத நிலையிலும், தேசிய முரண்பாடுகளை தீர்ப்பதற்கு, நாட்டிலும், சர்வதேசமட்டத்திலும் வழிமுறைகள் எதுவும் இல்லாத நிலையிலும், தமிழ் மக்களின் சாத்வீக போராட்டமானது காலப்போக்கில் ஆயுதப்போராட்டமாக உருமாற்றம் பெற்றது. இக்காலத்தில் எழுந்த தமிழீழ நடைமுறை அரசாங்கம் தமிழ்மக்களுக்கு இந்த அரசியற்களத்தை வழங்கியிருந்தது. தமிழீழ நடைமுறை அரசாங்கமும் அது வழங்கிய அரசியற்களமும் அழிக்கப்பட்ட பின்னர் நிலமை முன்னர் இருந்த இடத்துக்கு மீளவும் தள்ளப்பட்டிருக்கிறது.

இச் சூழ்நிலையில், தார்மீக அடிப்படையிலும், நடைமுறைத் தேவையாகவும் நாம் ஒரு அரசியற்களத்தை இலங்கைத்தீவுக்கு வெளியில் உருவாக்குவது தேவையானதாக அமைந்தது. இவ்வாறான சூழ்நிலையிலேயே தான் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற எண்ணக்கரு உருவாக்கம் பெற்றது. இதற்கான அரசியல் வழிமுறை, தமிழரும் தமிழர் அல்லாதவர்களுமான அறிஞர்கள் பலரைக் கொண்ட ஒரு மதியுரைக் குழுவினால் முன்வைக்கப்பட்டது. 12 நாடுகளில் நாடு தழுவிய செயற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, தேர்தல்கள் நடாத்தப்பட்டன. அரசியலமைப்பு உருவாக்கல் குழு அமைக்கப்பட்டு அரசியலமைப்பு வரையப்பட்டு, விவாதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு அதன்படி அரசாங்கமும் அமைக்கப்பட்டது.

## உலக அறிஞர்களின் படைப்பே நாடுகடந்த தமிழீழம்

முள்ளிவாய்க்காலுக்குப் பிறகான காலத்தில் தமிழ்மக்களின் போராட்டத்தினை ஜனநாயக இராஜதந்திர வழியில் முன்னெடுப்பதே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடாக அமைந்துள்ளது.

**கேள்வி :- தமிழீழ விடுதலைப்புலிகளை ஐரோப்பிய யூனியன் பயங்கரவாத அமைப்பாக மீளவும் பட்டியலிட்டுள்ளது. இதுபற்றி நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கருத்து என்ன?**

**பதில் :-** பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பிறகு இவ்வாறாக ஐரோப்பிய யூனியன் தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் பட்டியலிட்டிருப்பதை தமிழ்மக்கள் தமக்கெதிராக மேற்கொள்ளப்படும் அநியாயமாகவே பார்க்கிறார்கள். மேலும், உண்மையான நிலையையும் முரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணங்களையும் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளத் தவறிவிட்டதா என்ற கேள்வியையும் இது எழுப்புகிறது. இந்த நிலையை நிவர்த்தி செய்யும் முயற்சிகளை மேற்கொள்ளும்படி தமிழ் மக்கள் எம்மை அணுகியுள்ளனர்.

இவ்வாறாக வரைவிலக்கணப்படுத்தியதையும், அதற்கான சட்ட வரையறையையும் எதிர்கொண்ட சட்டத்தரணி என்ற அடிப்படையில் நான் இதனுடன் சம்பந்தப்பட்டுள்ளேன். நீதிமன்றுகள் இவற்றை அரசியல் பிரிவுகளே முடிவெடுக்குமாறு விட்டு விட்டுள்ளன. அரசியற் காரணங்களுக்காக சட்டம் பயன்படுத்தப்படும்போது அது சட்டத்தின் உறுதிப்பாட்டைப் பாதிப்பதுடன், அந்த நாட்டு மக்களது சட்டவியல் சுதந்திரத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கும். இந்த அரசியல் முடிவை மீளாய்வு செய்யுமாறு ஐரோப்பிய யூனியனை நாம் கேட்க வேண்டியது அவசியமாகிறது.

இன்று ஐரோப்பிய யூனியன் நாடுகள் தம்மைத்தாமே ஒரு கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். 'எமது கடந்தகால செயற்பாடுகள் 60, 000 தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தியதா? எமது செயற்பாடுகள் கடந்தகாலத்தில் தமிழ்மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க உதவியதா? இல்லாவிட்டால், ஏன் உதவவில்லை? ஏதும் தவறுகள் இடம்பெற்றிருந்தால் அவை எவை? எங்கு எப்படி இத் தவறுகள் இடம்பெற்றன?" கடந்த காலத்தில் நடந்தவைகளை மறந்து முன்னோக்கிச் செல்லவேண்டியதன் சிறப்பை மற்றவர்களுக்குப் போதித்து வந்தவர்களே, இன்று தாம் கடந்தகாலப் பார்வையோடு வீணே வாழ்ந்து வருவது மிகவும் கவலைக்குரியது.

தமிழீழ விடுதலைப்புலிகளை மீளவும் பட்டியலில் இட்டிருப்பது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினை எவ்வகையிலும் பாதிக்காது என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**கேள்வி :- நீங்கள் பிரபாகரனின் பின்வந்த 'வாரிசு' என்று பல்வேறு ஊடகங்களில் செய்தி வெளிவந்திருப்பது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

**பதில் :-** தமிழர் விடுதலைப்போராட்டத்தில் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் பங்களிப்பு தனித்துவமானதும் விசாலமானதுமாகும்.

நான் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற பொறுப்பினை மக்கள் எனக்குத்தந்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினராகவும் பின்னர் பிரதமராகவும் என்னைத் தெரிவு செய்துள்ளார்கள். ஆகவே, சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழத் தனிநாட்டினை அடைவதற்காக எனக்கு அளிக்கப் பட்டுள்ள வழிமுறைகளுக்கூடாக நான் அனைத்தையும் செய்வேன்.

**கேள்வி :- நீங்கள் தன்னைத் தானே நியமித்துக்கொண்ட பிரதமர் என்று நோர்வேயிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பேரின்பநாயகம் சிவபரன் தலைமையிலான நாடுகடந்த தமிழீழ அரசின் ஒரு பகுதியினர் குற்றம் சாட்டி வருவதாக அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. அது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

**பதில் :-** நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு ஜனநாயக அமைப்பு. அங்கத்தவர்கள் சுதந்திரமானதும், வெளிப்படையானதுமான சர்வதேச தராதரத்தின் படி தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்கள். தேர்தல் ஆணையாளர்கள் நடுநிலைக்கும் நியாயத்துக்குமான அவர்களின் தராதரத்தில் உயர்வாக மதிக்கப்படுபவர்கள். உதாரணமாக, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமெரிக்கத் தேர்தல்களுக்கு ஆணையாளராக அமெரிக்க அரசின் முன்னாள் சட்டமா அதிபர் ராம்சே கிளார்க் பணியாற்றினார். தேர்தல்கள் மிகவும் உற்சாகமாக இடம்பெற்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் மணித்தியாலக் கணக்காக வரிசைகளில் நின்று வாக்களித்தார்கள். பலதேர்தல் கண்காணிப்பாளர்கள் தேர்தல்களைக் கண்காணித்து, அவை நியாயமாகவும் நீதியாகவும் இடம் பெற்றதாக அறிவித்தனர். உலகெங்கும் உள்ள ஊடகங்கள் இத் தேர்தல்களைப் பற்றி செய்திகளை வெளியிட்டிருந்தன.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் அரசியலமைப்பு ஒன்றினை அங்கீகரித்து பிரதமர் உட்பட பல பதவிகளை வகுத்துள்ளனர். நான் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டேன். இவ்வாறாக ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டவர்களான எம் மத்தியில் கொள்கை வேறுபாடுகள் எதுவுமில்லை. ஒவ்வொருவரும் உண்மையாவும், செயற்றிறனுடனும் அர்ப்பணிப்புடனும் சுதந்திரமான இறைமையுள்ள தமிழீழத்தை இராஜதந்திர முறைகளில் வென்றெடுக்க வெளிப்படையாகவும் அமைதியான வழியிலும் வன்முறைகளுக்கு இடமில்லாத வகையிலும் முயற்சி செய்கின்றனர். உலகம் முழுவதுமுள்ள தமிழ்மக்களின் விருப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அங்கத்தவர்கள், குறிப்பாக முள்ளிவாய்க்காலில் 60, 000 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில் தமக்குள்ள பாரிய பொறுப்பை அறிந்துள்ளனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட இச் சம்பவங்கள் அரசு சம்பந்தப்பட்ட நடை முறைகள் பற்றியவை என்பதுடன், இவை ஜனநாயக அமைப்புகளில் இயல்பாகவும் சாதாரணமாகவும் இடம் பெறுபவையே. இவை எந்த வகையிலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினைத் தளரவைக்காது என்பதுடன், சுதந்திர தமிழீழத்துக்கான எமது செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கமாட்டாது என்பதும் எமது திடமான நம்பிக்கையாகும். *(தொடரும்)*

# தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள் தீவக கல்வி வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

(தொடர்ச்சி)

## பெண்களுக்கான போட்டிகள்

**11 வயதிற்கு கீழ்பட்டவர்கள்**

**75 மீற்றர்**

ரி.நதுசா (யா/மண்டைதீவு ம.வி), ஜெ.ஜெனிற்றா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தி), எம்.கயல்விழி (யா/யாழ்ற்ரன் கல்லூரி).

**100 மீற்றர்**

ஜெ.ஜெனிற்றா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தி),ரி.நதுசா (யா/மண்டைதீவு ம.வி),வி.லவிந்தா (யா/காரை சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி).

**நீளம் பாய்தல்**

ஜெ.ஜெனிற்றா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தி),கே.தனுஷிகா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தி), எஸ்.சரண்யா (யா/ காரை ஊரி அ.த.க.பா).

**உயரம் பாய்தல்**

எ.சுவிதா (யா/புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி),பி.அனுசியா (யா/நெடுந்தீவு ம.வி), வி.ஜென்சி (யா/வேலணை மேற்கு நடராஜா வித்தி).

**4X100 மீற்றர் அஞ்சல்**

யா/சென்மேரிஸ் றோ.க.ம.வி,யா/யாழ்ற்ரன் கல்லூரி, யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

**13 வயதிற்கு கீழ்பட்டவர்கள்**

**100 மீற்றர்**

எஸ்.மீராளம்சிசா (யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி), கே.சரண்யா (யா/நயினாதீவு சிறிகணேசா கனிஸ்ட ம.வி), கே.கீர்த்தனா (யா/சரவணை நாகேஸ்வரி வித்தி).

**200 மீற்றர்**

எஸ்.மீராளம்சிசா (யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி), ஜெ.கிருஷாந்தினி (யா/வேலணை மத்திய கல்லூரி), கே. அபினோஜா (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி).

**நீளம் பாய்தல்**

ஜெ.கிருஷாந்தினி (யா/வேலணை மத்திய கல்லூரி),சி.கௌசல்யா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தி),கே. கீர்த்தனா (யா/சரவணை நாகேஸ்வரி வித்தி).

**உயரம் பாய்தல்**

எஸ்.மீராளம்சிசா (யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி), ஜெ.கிருஷாந்தினி (யா/வேலணை மத்திய கல்லூரி),வி.தனுஷா (யா/வேலணை மத்திய கல்லூரி).

**4X100 மீற்றர் அஞ்சல்**

(யா/வேலணை மத்திய கல்லூரி), (யா/எழுவைதீவு முருகவேல் வித்தி),(யா/யாழ்ற்ரன் கல்லூரி).

**15 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்**

**100 மீற்றர்**

எஸ்.சுதேந்தினி (யா/எழுவைதீவு முருக வேல் வித்தி), பி.கோபிகா (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி),எம்.கேதாரணி (யா/நயினாதீவு சிறிகணேச கனிஸ்ட ம.வி).

**200 மீற்றர்**

அ.அமலவக்சனா (யா/நெடுந்தீவு ம.வி), எஸ்.சுதேந்தினி (யா/எழுவைதீவு முருகவேல் வித்தி), பி.கோபிகா (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி).

**400 மீற்றர்**

கே.கிருஷா (யா/சென்மேரிஸ் றோ.க.ம.வி),ஏ.மேரிஏரோமி (யா/அல்லைப்பிட்டி பராசக்தி ம.வி), என்.றம்சா(யா/வேலணை மத்திய கல்லூரி).

**4X100 மீற்றர் அஞ்சல்**

(யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), (யா/வேலணை மத்திய கல்லூரி), (யா/சென் மேரிஸ் றோ.க.ம.வி)

**4X400 மீற்றர் அஞ்சல்**

(யா/வேலணை மத்திய கல்லூரி),(யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி),(யா/நாரந்தனை றோ.க.ம.வி)

**நீளம் பாய்தல்**

ஆர்.கீர்த்திகா(யா/மண்டைதீவு ம.வி), என்.தர்சிகா(யா/எழுவைதீவு முருகவேல் வித்தி),பி.கோபிகா (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி).

**உயரம் பாய்தல்**

எஸ்.றம்சி(யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி),எஸ்.றதீஸ்வரி(யா/யாழ்ற்ரன் கல்லூரி),வி.டேமியா (யா/நெடுந்தீவு றோ.க.ம.க)

**குண்டெறிதல்**

எஸ்.அருள்மொழி(யா/நெடுந்தீவு ம.வி), கே.தயாளினி(யா/நெடுந்தீவு ம.வி),எஸ்.கௌசிகா(யா/வேலணை மேற்கு நடராஜா வித்தி.

**தட்டெறிதல்**

டி.பிறிசில்டா(யா/அனலைதீவு சதாசிவ ம.வி), ஆர்.டொறினா (யா/புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி), எஸ்.சுலக்சனா (யா/அனலைதீவு சதாசிவ ம.வி).

**ஈட்டியெறிதல்**

சி.மேரிசயந்தா(யா/நெடுந்தீவு சிகிரியாம் பள்ளம் அ.த. க.பா) ஆர்.டொறினா (யா/புங்குடுதீவு சுப்பிர ணிய மகளிர் வித்தி), எஸ்.சிறோமி(யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி). (தொடரும்)

# காணிப்பதிவேடு தயாரித்தல்

(உடுப்பிட்டி)

சகல கமக்கார அமைப்பு பிரிவுகளுக்கும் காணிப்பதிவேடு தயாரிக்கப்படவுள்ளதால் தங்கள் பிரிவை சேர்ந்த கமக்காரர்கள் புலோலி கமநல சேவை நிலையத்தில் விண்ணப்பங்களைப் பெற்று உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் மேமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் யூலை மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் காணிப்பதிவேட்டின் படியே சகல நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படும் என கமநல உத்தியோகத்தர் கே.கோகுலன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-52)

# விடுதலைப்புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வுக்கு 1500 மில்.நிதி ஒதுக்கீடு

அரசாங்கத்திடம் சரணடைந்துள்ள விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு புனர் வாழ்வளிப்பதற்காக அரசாங்கம் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கி யுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திபொன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திடம் 11 ஆயிரத்து 361 விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சரணடைந்தனர். இவர்களில் 5 ஆயிரத்து 960 பேர் புனர்வாழ்வு பயிற்சிகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் கஜதீர மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# அமைச்சர் ஜி.எஸ்.பீரிஸ் லியாம் பொக்ஸ் சந்திப்பு

பிரித்தானியாவுக்கு தற்போது விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரித்தானிய பாதுகாப்புத் துறை செயலாளர் லியாம் பொக்சை சந்திக்கவுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை வெளிநாட்டு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலருடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த விஜயத்தின்போது அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரித்தானிய சட்டதுறை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கட்டித்ததன் பின்னர் இலங்கை அடைந்த இலக்குகள் குறித்து அந்த அதிகாரிகளுக்கு அமைச்சர் தெளிவுபடுத்தியதாக வெளிநாட்டு அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.யுத்தத்திற்கு பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்த சட்ட அதிகாரிகள் பலரும் அந்த குழுவில் உள்ளடங்கியிருந்தனர்.

இந்த நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து இலங்கை தமது அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியாது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்துள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் அரசியல் இணக்கப்பாடுகள் பொருட்டு தமிழ் கட்சியுடன் அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்தக் கலந்துரையாடலின் போது விளக்கியுள்ளார். (ஸ்ரீ-2)

# வீதி விபத்துக்களால் வருடாந்தம் 2 ஆயிரத்து 500 பேர் உயிரிழப்பு

இலங்கையில் ஏற்படும் வீதி விபத்துக்கள் மூலம் வருடாந்தம் சுமார் 2 ஆயிரத்து 500 பேர் வரை உயிரிழப்பதாகவும் வருடாந்தம் சுமார் 80 ஆயிரம் வாகன விபத்துக்கள் ஏற்படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான விபத்துக்கள் மூலம் சுமார் 20 ஆயிரம் பேர் அங்கவீனமடைகின்றனர். நாட்டின் பிரதான வீதிகளில் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

அடிக்கடி வாகன விபத்துக்கள் ஏற்படும் வீதிகளை அடையாளம் கண்டு அவற்றில் அவசர சிகிச்சைகளை வழங்க தொழில்நுட்ப கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

கவனமின்மை, குடிபோதை , அதிக வேகத்துடன் வாகனங்களை ஓட்டுதல் போன்ற காரணங்களினால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன எனவும் அவ் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஒலிப்பேழை வெளியீடும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம் மூளாய் வதிரன்புலோ விநாயகப் பெருமானின் வரலாற்றுச் சிறப்பு களைக் கூறும் ஒலிப்பேழைவெளியீடும்நூல்வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் விசேடமாக ஈழத்தின் மூத்த முன்னணி கர்நாடக இசைக் கலைஞர்களும் முன்னணிப்பாடகர்களும்அறிவிப்பாளர்களும்முதன் முறையாக பட்டம் வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனர். (ஸ்ரீ-2)








இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதம முகாமையாளராக நேற்று முன்தினம் கந்தசாமி கேதீசன் தனது கடமையை பொறுப்பேற்றார்.இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பிரதம பிராந்திய முகாமையாளர் மங்கல விளக்கேற்றுவதையும், தனது பதவியை பொறுப்பேற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### அம்மாவிற்கு

உறக்கம் கேட்ட
உன் விழிகள்
பாயை ஏற்க
மறுத்து விட்டது...!
கல்லறை தான் வேண்டும்
என்று சென்று விட்டாயே
உன் திருமுகத்தை
கல்லறையில் தேடுகிறேன்

இ.நர்மதன்
அண்ணாசிலையடி

### இதயத்துடிப்பில் நீ...

அணைப்பாரின்றி
அநாதையான போது
உன் அன்பு
எனக்குள் விதையானது
காலங்கள் பல கடக்கையில்
நீ பிரிந்து சென்றாய்...
ஆனால் இன்னும்
உனக்காக இதயம்
துடிக்கிறது உன்
வரவை எண்ணி...

பொ.கிருசாந், சங்கானை

### அடிமை

பிறந்தேன் வளர்ந்தேன்
உண்டேன் உறங்கினேன்!
இறந்தும் தஞ்சமென்று
உன்னிடமே வருகின்றேன்
அதனால் பூமித்தாயே!
உனக்கு நான் அடிமை!

அருமைச்சந்திரன்
வடவரணி

### ஊமை விழிகள்

நான் சொன்னாலும்
உங்களுக்கு புரியாது!
நான் சொல்வது
உங்களுக்கு புரிந்தாலும்
உங்கள் மனமோ இரங்காது!
எனக்கும்
அவளுக்கும்தான் தெரியும்
அந்த கண்ணீர்க்கதை
மற்றும்படி
எவருக்குமே தெரியாது!
அந்த காதல்கதை
என்றோ ஒருநாள்
நீங்கள் அறிவீர்கள்
அன்று என் கல்லறைக்கு
பூக்கொண்டு வருவீர்கள்!

உயிரோவியன்

### கவிதைத் துளிகள்

**கல்வி**
ஆயுள் வரைக்கும்
நிலைத்து நிற்கும்
அரிய பொக்கிஷம்
**பணம்**
நல்லபண்பினை
நொடியினில்
மறைத்திடும்
மாயப்பொருள்
**பெண்**
குடும்பச்சுமை
கண்ணீர்
ஏமாற்றம் இவைகளின்
சொந்தக்காரி
**பெற்றோர்**
பிள்ளைகளின் உயர்வுக்கு
தம்மை உருக்கிடும்
மெழுகுவர்த்தி

கி.சரண்யா
தாவடி

### நிர்க்கதியாய்

என்னவரைக் காதலித்தேன்
பெற்றோரின் அனுமதியுடன்
கைப்பிடித்தேன்
ஊரார் மெச்சும் படி வாழ்ந்தோம்
வன்னிப் போரில்
அவரைப் பிரிந்தேன்
நிர்க்கதியாய் தவிக்கின்றேன்
விதவைக் கோலத்தில்

க.மலர்
இடைக்காடு

### காத்திருப்பு

வெள்ளை ரோஜாவே!
உன் சிவப்பழகு...
கண்ணை பறிக்கிறதே
உன் பொன்வாயால்
வணக்கம் கூறுவாயா?
அதற்காய் காத்திருப்பேன்

அ.கிஷானி
கைதடி மேற்கு

### காதல் கிரிக்கெட்

காதல் கிரிக்கெட் விளையாட்டில்
களமிறங்கிய எனக்கு முடிவால்
கிடைத்ததெல்லாம் வெறும்
கண்ணீர்க் கிண்ணமும்
தோல்வி விக்கெட்டுக்களுமே!

செ.ரவிசாந், குப்பிளான்

### இமயம் தொட...

உண்டாக்கு...
தூக்கணாங் குருவிகள்
உண்மை உழைப்பினால்
கூடு செய்கிறதே!
நீ நேர்மையாய் உழை
நிம்மதியாய்த் தூங்குவாய்
உன் உழைப்பின் வெகுமதியே
நோயை விரட்டும்
வியர்வைத் துளிகள்

மாவை. நா.கஜேந்திரா

### காணாமல் போன...

ஆசையாய் பசுக்கன்றொன்று
வீட்டில் வளர்வதைப்
பார்த்துக் கொண்டிருந்தேன்
தினமும் என் பின்னால் ஓடித்திரியும்
தமிழ் என்று பெயரும் சூட்டினேன்
கழுத்துக்கு சலங்கை
பூட்டி அழகுபார்ப்பேன்
காலங்கள் நகர்ந்தன
பசுவாய் வளர்ந்தது
எனக்கொரு கன்று தருமென
கனவும் கண்டேன்
சிலநாளில்–என்
பசுவை காணவில்லை
தேடினேன்... புலம்பினேன்...
எங்கோ பற்றைக்குள்
நான் கட்டிய சலங்கையும்
அதன் கொம்பும் எச்சங்களாய்...

ஆ.முல்லைதிவ்யன்
பொலிகண்டி



## மௌனத்தின் தேடல் – 64

### முயன்றால்

இரந்து கேட்டு
உண்டு வாழும்
இழிவு வாழ்வு
வேண்டாம்
துணிந்து நீங்கள்
முயன்றால்
தடைகள் உடைத்து
உயர்ந்து வாழ்ந்திடலாம்

சு.சி.தமிழினி
சுன்னாகம்.

### தடுமாற்றம்

பட்ட வயிறு
தொட்டு துளிர்த்திடவே
தட்டு தடுமாறும்
நெஞ்சங்கள்

கே.ரஞ்சித் விஜயகுமார்
யாழ்ப்பாணம்.

### ஏக்கம்

அன்னையோ
முள்ளிவாய்க்காலில்
தந்தையோ
தடுப்பு முகாமில்
நாங்களோ
அகதி முகாமில்
ஒருவேளை சோறின்றி!

க.செல்வி
சிறுவர் இல்லம், திருநெல்வேலி

### பரிதவிப்பு

பெற்றோரை இழந்தோம்
உறவை இழந்தோம்
ஊராரை இழந்தோம்
இப்போது அகதிமுகாமில்
ஒருவேளை சாப்பாட்டிற்காய்...

க.செல்வா
சிறுவர் இல்லம், திருநெல்வேலி

### பசி

கண்ணைப் பறிக்கும்
வெள்ளிக்கிண்ணங்கள்
கால் வயிறுக்காய்த் தவிக்கும்
பிஞ்சுக் கைகளிலே

ஆர்.லக்சி
சிறுவர் இல்லம், திருநெல்வேலி

### பட்டினி

ஆண்டு பல
ஓடி மறைந்து விட்டது
உண்டு பலநாள்
ஆகிவிட்டது
எங்கள் வயிறுகள்
இன்னும்
நிறையவில்லை....

வே.வே.அகிலேஸ்வரா
மருதங்கேணியூர்

### அவலம்

அண்டை நாடுகளின்
ஆயுதபரிணாமத்தால்
அடுத்த வேளைக்காக
கையேந்தும்
அகதி வாழ்வும்
இப்படியே...
நீண்டுபோகிறது

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

### ஏக்கம்

ஒருவேளை உணவுக்காகத்
தட்டுடன் காத்திருக்கும்
இந்த அகதிச் சிறார்களின்
அவல வாழ்க்கைக்கு
எப்போது வைக்கப்படும்
முற்றுப் புள்ளி

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### உனக்காக...

வருகையை எதிர்பார்த்து
ஏங்கும் கண்களுடனும்
பசியுடனும்

சி.பிரணவி
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### எதற்கென்று...

சாளர வெளியூடாக
பள்ளத்தில் தேங்கி நிற்கும்
வெள்ளத்தைப் பாத்திரத்தில்
அள்ளி எடுக்கின்றார்
அழகிய இள மங்கையர்

துரை
தென்மட்டுவில்

### காலத்தின் கோலம்

ஏழ்மையின் நிலையறியா
வயிறு கொதிக்க
கோப்பையுடன் காத்திருக்கும்
நிலைமையும் காலத்தின்
கோலமா?

ம.கார்த்திகா
யா/இந்துமகளிர் கல்லூரி

### தவிப்பு

அடைபட்டுக்கிடக்கின்றோம்
அரவணைக்கவும்
அன்னம்அளிக்கவும்
அன்னை இல்லை–எமக்கு
யாருமே இல்லை...

ஜே.கீர்த்தனன்
பருத்தித்துறை

### வயிற்றுப் பசி

இயற்கை அன்னையின்
இரக்கமில்லாப் பசிக்கு
பெற்றாரைப்பறிகொடுத்தவர்கள்
தங்கள் வயிற்றுப்பசி போக்கிட
வெற்றுப் பாத்திரங்களுடன்...

வி.சிறீதேவி
அல்லையம்பதி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 65



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 08.04.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# காசநோய் சமூக அணுகுமுறை

## 25 காசநோய்க்கான விழிப்புணர்வு



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

வறிய குடும்பங்களில் காசநோய் ஏற்பட்டிருப்பின் அவர்களது குடும்ப வருமானத்தினை அதிகரிக்க (Capacity building) கூடிய தொழில் வளங்களை உருவாக்கலாம். அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தும் (Liftup)செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

**15.காசநோய் தொடர்பாக சமூக மாற்றத்தின் விற்பனைகள் (Social Marketing)**

1.இருமல் என்றால் சோதித்தால் உறுதியாகி விடும் என்ற பயம் காரணமாக சளிப்பரிசோதனைக்கு வருவதில்லை.2 கிழமைகளுக்கு மேல் இருமல் இருப்பின் சளிப்பரிசோதனை செய்வதால் தற்செயலாக காசநோய் இருப்பின் கண்டுபிடிக்கப்படலாம். எனவே காசநோய்க் கட்டுப்பாட்டிலும் நோயாளி குணமடையவும் சளிப்பரிசோதனை இன்றியமையாதது.

2. மருந்து எடுக்க வரும்போது மற்றவர்கள் தங்களை ஒதுக்கிவிடுவார்கள் என்ற பயம்.

காசநோய் சாதாரண பக்றீரியா நோயைப் போன்றது பூரணமடையக்கூடியது. மேலும் இதனை ஒரு குறித்த இடத்தில் மட்டும் வைத்து சிகிச் சை செய்வதில்லை. எனவே மற்றவர்கள் ஒதுக்கிவிடுவர் என்ற பயம் அவசியம் இல்லை. காசநோய்க்கு மட்டுமல்லாது ஏணைய சுவாச நோய்களுக்கும் மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்படுவதால் மார்பு நோயில் சிகிச்சை நிலையத்திற்கு செல்வதற்கு தயக்கம் வேண்டாம்.

3. நோயாளிகள் மருந்து எடுக்கும் போது மருந்தின் வீரியம் கூட என நினைத்தல். இதனால் முழு மருந்துகளையும் எடுக்காது விடல் அல்லது குறித்தகாலத்திற்கு மருந்தினைஎடுக்காது விடல் காணப்படுகின்றது. இது முற்றிலும் தவறான செய்கையாகும். நோயாளிகள் வைத்தியர் கூறிய படி குறித்த அளவுமருந்துகளை கிரமமாக எடுத்தல் வேண்டும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரை அணுகி ஆலோசனை பெறல் வேண்டும்.

4. சமூகமட்டத்தில் முழுமக்களையும் பரிசோதிக்க வேண்டும் என்ற எண்ணம் சிலரிடம் உள்ளது. உண்மையில் சமூகத்தில் ஒவ்வொரு 3 பேரில் ஒருவருக்கு காசநோய்க் கிருமியில் தொற்று உள்ளது.ஆனால் நோய்த் தொற்று உள்ள அனைவரும் நோயாளி ஆவதில்லை.அடுத்து முழுசமூகத்திலும் சளிப் பரிசோதனை செய்வதற்கு போதிய ஆளணி வளம் இல்லை. எனவே,காசநோய்க்கு உரிய அறிகுறிகள் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தினை சென்றடைந்தால் அவர்கள் தாமாகவே முன்வந்து சிசிச்சையினை பெறுவர். அடுத்து ஒரு தடவை பரிசோதித்து விட்டு காசநோய் இல்லை என்ற முடிவுக்கு வரமுடியாது. ஏனெனில் காசநோய்த்தொற்றிலிருந்து நோய் அறிகுறிகள் உருவாக சில மாதங்களிலிருந்து பல வருடங்கள் செல்லலாம்.

5.காசநோய் என அடையாளம் காணப்பட்டால் வெளிச்செல்ல முடியாத நிலை, புறக்கணிக்கப்படல்,ஒதுக்கப்படல். இவை பொதுவாக சமூகத்தில் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் அந்நிலை வரும்போதே நோயின் உண்மை நிலையை விளக்கக் கூடியதாகஇருக்கும்.இது ஒரு தொடர்பாடல் இடைவெளி. இதனை நிரப்ப சிறந்த கிராமிய அல்லது சமூக விழிப்புணர்வுத் திட்டங்கள் தேவை.

6.காசநோய் தொடர்பாக போதிய அளவு சிகிச்சை நடைபெறல் வேண்டும்.இதற்கு 2கிழமைக்கு மேல் இருமல் உடையவர்கள் சளியினை பரிசோதிப்பதற்கு நுணுக்குக் காட்டி தேவை.தனிப்பட்ட வைத்தியசாலைகளும் 2 கிழமைகளிற்குமேல் இருமல் காணப்படின் சளிப்பரிசோதனை செய்ய முன்வரல் வேண்டும்.

7. நோயாளிக்கு சிகிச்சை இலகுவில் நடைபெறல் வேண்டும். நோயாளிகளின் நேரத்தை வீணாக்காது அல்லது நோய் அறிகுறி உடையவர்களின் நேரத்தை வீணடிக்காது சிகிச்சை அளித்தல் வேண்டும்.

8. காசநோய் பரவும் வழிமுறைகள் பற்றிய விளக்கம் தெளிவாக கொடுக்கப்படல் வேண்டும்.

9. மருந்துகளை நன்கு பரீட்சயமாக படித்தவர் விநியோகிக்க வேண்டும்.

10. பொதுவாக இருமல் என்றால் நோயாளிகள் தாமே மருத்துவரின் ஆலோசனை இன்றி எடுப்பது வழக்கமாயிற்று. ஆனால் அது காசநோயாகவும் நோயைப் பரப்பிக் கொண்டு இருப்பர்.

11. காசநோயாளிகள் அனைவருக்கும் பொறுப்பாக ஒருவர் நின்று மருந்து கொடுத்தல் அவசியம்.

அவ்வாறு செய்யாவிடின் அவர்கள் மருந்துகளை கைவிட ஏதுவாக அமையலாம். இது பொதுவாக கசிப்புக்குடிப்பவர்களில் காணப்படும். சாதாரணமாக ஏனையோரில் தூர இடத்துக்கு பிரயாணம் செய்தல், வேலை, திருமண வீடு,மரணவீடு என்று இன்னோரன்ன காரணங்களுக்காக மருந்துகளை இடைநிறுத்திவிடுவர். சிலர் போக்குவரத்திற்கு பணம் இன்மையாலும் மருந்துகளை இடைநிறுத்திவிடுவர். எனவே ஆரம்பத்திலேயே இத்தகைய நிகழ்வுகள் ஏற்படக் கூடியவர்களுக்கு போதிய வழிகாட்டல்களை வழங்குவதால் மருந்துகளை இடையில் கைவிடுவதனைத் தவிர்க்கலாம்.

12. காசநோய் ஏற்பட்டவர் நோய் மாறும் வரை தனித்தவராக இருக்கவேண்டிய அவசியமில்லை. மருந்து எடுத்து இரண்டு கிழமைகளிற்கு பின் அவரில் இருந்து நோய் தொற்றும் தன்மை அற்றுப்போகும். எனவே அவர் ஆரோக்கியமாக இருப்பின் தனது கடமைகளை செய்யலாம்.

13. காசநோய் என்றால் மாறாதநோய் என்ற எண்ணம் சிலரில் காணப்படுகின்றது. இது தவறானது என்பதை அவர்களிற்கு புரிய வைத்தல் வேண்டும்.

14.பெரும்பாலானவர்கள் தமக்குக் காசநோய் உண்டு என்பதனை வெளியில் கூற விரும்பமாட்டார்கள். இது காசநோய்க்கு மட்டுமல்ல சலரோகம், இதயநோய், மனநோய் போன்றவற்றிற்கு கூட. ஆனால் இந்நோய் 6 மாதத்தில் குணமடைவதால் அவர்கள் பயப்பட வேண்டிய தேவை இல்லை. மேலும் அவர்கள் காணும் ஒவ்வொரு 3 பேரில் ஒருவருக்கு காசநோய் கிருமி தொற்றி உள்ளது என்ற உண்மை தம்மை வேறுபடுத்தாது பார்க்க உதவும்.

(தொடரும்)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடு பட்டுவந்த குழுவினர் கைது

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தருவதாக கூறி பல இளைஞர்-யுவதிகளிடம் நிதிமோசடியில் ஈடுபட்டு வந்த குழு ஒன்றை கண்டி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்களது மோசடியில் சிக்கிய பலர் கண்டி பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது இந்த குழு கைதுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்கள் வாடகைக்கு அமர்த்தியிருந்த கார் ஒன்றினையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

நால்வர் அடங்கிய இந்த குழுவினர் சுமார் 65 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தினை இவ்வாறு மோசடியாக பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## இலங்கை அகதிகளிடம் கனேடிய புலனாய்வாளர்கள் விசாரணை

(கொழும்பு)

தாய்லாந்தின் விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளிடம் கனேடிய புலனாய்வுத்தரப்பினர் விசாரணை நடத்தி வருவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தாய்லாந்தின் ஊடாக கனடாவுக்கு தப்பி செல்லவிருந்த இலங்கை அகதிகள் கடந்த வருடம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

எனினும் முகாம்களில் இருந்த அவர்கள் மீண்டும் அங்கிருந்து கனடாவுக்கு தப்பிச் செல்ல முயற்சித்தாக கூறப்பட்டு பாங்கொங்கில் உள்ள விசேட முகாம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த முகாமில் தற்போது 140 இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மத்திய மின்நிலைய பிரதான மின்வழங்கல் வலைப்பின்னலில் திருத்த வேலைகள் நடைபெறவிருப்பதால் இன்று காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை யாழ்.குடாநாடு முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிர தேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

## ஏ9 பாதை திறக்கப்பட்ட பின்னர் உள்ளூர் விமான சேவைகள் பாதிப்பு

ஏ9 பிரதான வீதி போக்குவரத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வடபிராந்திய உள்ளூர் விமான சேவைகள் இடைநிறுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் குடா நாட்டுடனான வீதி போக்குவரத்தினை கட்டுப்படுத்தி வந்ததன் காரணமாக விமான சேவைகள் அதிகளவில் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்பொருட்டு பொது மக்களின் போக்குவரத்து சேவைகளுக்கான பல விமானங்கள் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.ஒரு மணி நேரத்திற்குள் குடா நாட்டை சென்றடையக் கூடிய வசதிகள் விமான சேவையின் மூலம் பயணிகளுக்கு இருந்த போதிலும் அதற்கான கட்டணம் அதிகளவாக காணப்பட்டது. இந்த நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஏ9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் குடா நாட்டு பயணிகள் வீதி போக்குவரத்தை கடைப்பிடிக்க ஆரம்பித்தனர்.

இதனையடுத்து விமான பயணிகளின் எண்ணிக்கை பாரிய வீழ்ச்சியை காட்டியதனை அடுத்து தற்போது அந்த சேவைகள் நடத்தப்படுவதில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இந்த சேவைகள் நடத்துவது இலாபமற்றது என்ற காரணத்தால் தனியார் விமான சேவைகள் குடாநாட்டுக்கான சேவைகளை முற்றாக இடைநிறுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சப்ரகமுவ பல்கலைக்கழகம் நாளை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள சப்ரகமுவ பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான கற்கை நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவர்களின் நன்மை கருதியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே முதலாம் வருட மாணவர்கள் முதல் நாளே தங்களது விடுதிகளுக்கு செல்லுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழக மூன்றாம், நான்காம் வருட மாணவர்களின் கற்கை நெறிகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சகல பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பிற்கு தாம் உறுதியளிப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)





யாழ். நீர்வேலி றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர். சி. தர்மரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ. கிருஷ்ணராசன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவிகளின் இசையும் அசைவும் நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# கணித ஒலிம்பியாட் தேசியமட்ட தெரிவுப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வி திணைக் களத்தினால் நடாத்தப்படும் தரம் 6,7 மாணவர்களுக்கான கணித ஒலிம்பியாட் தேசியமட்ட தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை கல்வி அமைச்சின் இசுறுபாய கேட்போர் கூடத்தில் நடைபெறுமென வடமாகாண மேல திக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பி.செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேரடியாகப் பாடசா லைக்கு கல்வி அமைச்சினால் அனு ப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தெரிவுப் பரீட்சைக்கு தெரிவான மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

பாஸ்பரகுருக்கள் யதுநந்தன சர்மா (யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி),றேமன்ரவீந்திரன் ஸ்ரெலின் டிலோசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), தங்கவேலாயுதம் வேல் கஜா (யா/ஹாட்லிக் கல்லூரி), ரவிச்சந்திரன் தவதான்ஜா (வ/இறம் பைக்குளம் ம.வி), ரவீந்திரா யதுசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சிவநேசன் யதுர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கணேசலிங்கம் சங்கவி (வ. இறம்பைக்குளம் ம.வி), ரகு நாதன் ஆதிரயன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), அச்சுதன் கீர்த் தனன் (யா/சாவகச்சேரி இந் துக் கல்லூரி), சாள்ஸ் கிறிஸ்ட்கிளன் சன் மிராண்டா (மன்/பற்றிமா ம.ம. வி), இன்பாகரன் சிந்துஜன் (யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி), சிவஞான லிங்கம் யாதவன் (யா/வீரசிங்கம் ம.ம.வி.- மீசாலை). (ஸ்ரீ-2)

# புதுவருடத்தை முன்னிட்டு சனி,ஞாயிறு தினங்களில் வர்த்தக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர் வரும் 14 ஆம் திகதி வியாழக்கி ழமை வரையுள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங் களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலை யங்களையும் திறந்து வியாபாரம் செய்யலாம் என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

அத்துடன் விடுமுறை தினங் களில் வேலை செய்யும் ஊழி யர்களின் நலன் பேணப்பட வேண்டுமென யாழ். வர்த்த கர்களை யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# வீ.டி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ண துடுப்பாட்ட போட்டி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் விளையாட்டு கழகம் 9 ஆவது ஆண்டாக நடத் தும் மேற்படி வெற்றிக் கிண்ணத் திற்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டி யில் 10 அங்கத்துவ கழகங்களும் 5 அங்கத்துவத்திற்காக காத்திருக் கும் கழகங்களும் பங்கு பற்றவுள் ளன.

மேல் பிரிவில் யாழ். ஜொனி யன்ஸ், கிருஸ்கொப்பர்ஸ், யாழ். சென்றல், ஜொலுஸ்ரார்ஸ், ஸ்கந்தா ஸ்ரார்ஸ், திருநெல்வேலி கிறிக்கெட் கழகம், ஈகிள்ஸ், அரியாலை சென் றல் ஆகிய 8 கழகங்களும் கீழ்ப்பிரி வில் யூனியன்ஸ், நியூஸ்ரார், மானி ப்பாய் பரிஸ், சிறிகாமாட்சி, பற்றீசிய ன்ஸ், ஓவ்ட்கோல்ஸ் ஆகிய 7 கழ கங்களும் பங்கு பற்றுகின்றன.

இச்சுற்றுப் போட்டியில் 7 முதல் சுற்று ஆட்டங்களும் 4 கால் இறுதி போட்டிகளும் 2 அரை இறுதிப் போட் டிகளும் ஒரு இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளன.

முதல் சுற்று ஆட்டம் இன்று ஞாயி ற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் பரிஸ் அணியினருக்கும் சிறிகாமாட்சி அணியினருக்கும் இடையில் நடை பெறவுள்ளது. இப்போட்டி தொடரில் 82 ஆவது போட்டி என்பது குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ)

2011.04 03

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1865* - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகர் ரிச்மண்ட் நகரைக் கைப்பற்றினர்.

★ *1917* - வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்த விளாடிமிர் லெனின் ரஷ்யா திரும்பினார்.

★ *1922* - ஜோசப் ஸ்டாலின் சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் முதற் பொதுச் செயலாளரானார்.

★ *1933* - நாசி ஜேர்மனியில் யூதர்களின் வணிக நிறுவனங்களைப் புறக் கணிக்கும் நடவடிக்கை வெற்றி பெறவில்லை.

★ *1942* - இரண்டாம் உலகப் போர்: பட்டான் தீபகற்பத்தில் ஜப்பானியப் படையினர் அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் படையினர் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ *1948* - தென் கொரியாவில் ஜேஜு என்ற இடத்தில் மனித உரிமை மீறல் மற்றும் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.

★ *1958* - பிடெல் காஸ்ட்ரோவின் புரட்சி இராணுவம் ஹவானா மீது தாக் குதல் தொடுத்தது.

★ *1966* - சோவியத்தின் லூனா 10 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தை அடைந்தது. பூமியை விட வேறொரு விண் பொருளைச் சுற்ற ஆரம்பித்த முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ *1973* - உலகின் முதலாவது நகர்பேசி அழைப்பு நியூயோர்க் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

★ *1975* - பொபி ஃபிஷர் அனதோலி கார்ப் பொவ்வுடன் சதுரங்கப் போட்டியில் பங்குபற்ற மறுத்ததால் கார்ப் பொவ் உலக வெற்றிக் கிண்ணத் தைத் தனதாக்கிக் கொண்டார்.

★ *1982* - போக்லாந்து தீவுகளை ஆர்ஜெண் டீனாவிடம் இருந்து மீளப் பெறும் முகமாக பிரித்தானியா தனது கடற்படையை அங்கு அனுப்பியது.

★ *1996* - ஐக்கிய அமெரிக்காவின் வான் படை விமானம் ஒன்று குரோ யேசியாவில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அமெரிக்க அரசின் வணிக செயலாளர் ரொன் பிரௌன் உட்பட 35 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1997* - அல்ஜீரியாவில் தலித் என்ற கிராமத்தில் 52 பொதுமக்கள் ஆயுததாரிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

## பிறப்புகள்

★ *1924* - மார்லன் பிராண்டோ, ஹொலிவுட் திரைப்பட நடிகர்.

★ *1934* - டேம் ஜேன் குட்டால், சிம்பன் சியைப் பற்றி ஆராய்ந்த ஆங்கிலேயப் பெண்.

★ *1955* - ஹரிஹரன், இந்தியத் திரைப்பட மற்றும் கசல் பாடகர்.

★ *1973* - பிரபுதேவா, இந்தியத் திரைப்பட நடிகர், நடன அமைப்பாளரும் மற்றும் இயக்குநர்.

## இறப்புகள்

★ *1680* - சிவாஜி, மராட்டியப் பேரரசர் (பி. 1630)

★ *1932* - வில்ஹெம் ஒஸ்ட்வால்ட், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய வேதியியலாளர். (பி. 1853)

**1974-13 அமெரிக்க மாநிலங்களில் ஆரம்பித்த கடும் சூறா வளி காரண மாக 315 பேர் கொல்லப்பட் டனர். 5,500 பேர் வரையில் காயமடைந்தனர்.**



# ஏன் ஆனந்தமாக இல்லை?



ஆன்மீகம் 13

### தற்பெருமையும் தவறான எண்ணமும்

உங்களைப் பற்றியே மிக அதிகமாக நினைத்துக் கொண்டிருப்பதும் மேலும் உங்களைப்பற்றி பலவிதமான கற்பனையான கருத்துக்களை கொண்டிருப்பதும் மட்டுமே தற்பெருமை என்று கருதிவிடாதீர்கள். வாழ்வின் யதார்த்தத்தோடு நீங்கள் தொடர்பின்றி இருந்தால் இதுதான் தற்பெருமை.



நீங்கள் ஈடுபடும் எந்த ஒரு செயலிலும் உங்களுக்கு எப்போதும் பெருமை இருக்கவேண்டுமென்று சொல்வார்கள். இது சிப்பாய்களிடம், அவர்களது இராணுவ உயர் அதிகாரியான சார்ஜென்ட் பேசும் பேச்சு போன்றதுதான். சிப்பாய் பேச்சு என்றால் என்ன தெரியுமா? சிப்பாய்கள் யுத்தகளத்திற்கு செல்வதற்கு அணிவகுத்து நிற்கும்போது, இந்த சார்ஜென்டுகள் அவர்களிடம் முழக்கமிடுவார்கள்...

"புறப்படுங்கள் வீரர்களே! நாம் போய் அந்த ஈனப் பயல்களை, அந்தக் கோழைகளைகளைப் பிடிப்போம். அவர்கள் எதற்கும் பயனற்றவர்கள். நாம் போய் அவர்களை நமது காலடியில் போட்டு நசுக்கிவிடுவோம். ஒருவரையும் விடாமல் சுட்டுக்கொல்வோம்!"

இதுதான் சிப்பாய் பேச்சு எனப்படுவது. இது உண்மையல்ல என்று பேசும் அந்த சாஜென்ட்டுகளுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் கேட்கும் சிப்பாய் இதை உண்மை என்று நம்புவான். ஆபத்தான சூழ்நிலையை துணிவோடு எதிர்கொள்ளும் தைரியத்தை இந்தப் பேச்சு அவனுக்கு அளிக்கிறது.

சார்ஜென்ட் அங்கே உட்கார்ந்து கொண்டு, "நீங்கள் போர்க்களத்திற்குப் போகிறீர்கள். எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகளையும் பயங்கரமான பீரங்கிகளையும் எதிர்கொள்ளப் போகிறீர்கள். போர்க்களத்தில் நீங்கள் துப்பாக்கியை இயக்கும் முன்னரே எதிரியின் குண்டுகளுக்கு இலக்காகி, உங்கள் உடல் துண்டு துண்டாக வெடித்துச் சிதறக்கூடும்" என்ற உண்மை நிலையைச் சொன்னால் என்ன ஆகும்? அவர்கள் போகமாட்டார்கள். இதை நீங்கள் புரிந்துகொள்வது அவசியம் சார்ஜென்டுகள் எப்படிப் பேசுவார்கள்? "அவர்களைக் கொல்ல நமக்குத் துப்பாக்கியெல்லாம் தேவையில்லை, நம் காலடியில் மிதிபட்டே அவர்கள் செத்துவிடுவார்கள்" என எதிரிகளை சுத்தமாக மட்டம் தட்டி சார்ஜென்ட் பேசுவது, சிப்பாய்களுக்குத் தற்பெருமை உணர்வைத் தோற்றுவிக்கும்.

"நாம் யார் இந்தியர்களான நாம் எப்படிப்பட்டவர்கள்? உலகிலேயே நாம் தான் வலிமையான மக்கள்". "நாம் யார்? நாம் அமெரிக்கர்கள். நமது தேசம் தான் உலகிலேயே மிகப் பெரிய தேசம்; மிகவலிமையான தேசம்; நம்மால் காலணி இல்லாமல் உலகெங்கும் நடக்கமுடியும். நமக்கு எதுவும் தேவையில்லை" இப்படிப்பட்ட பேச்சுதான், பலமானவன் என்கிற அடையாளத்துடன் கூடிய தற்பெருமை உணர்வை ஒரு சிப்பாய்க்கு அளிக்கும். யுத்தகளத்திற்குப் போய் அவனும் ஏதாவது செய்வான். செயலைச் செய்யத் தூண்டுவதற்கு இது ஒரு வழி.

உங்களைச் சுற்றி நிறைய முட்டாள்கள் இருக்கும்போது, அவர்களிடையே தற்பெருமை உணர்வை உண்டாக்கியே தீரவேண்டும். இல்லையென்றால் அவர்களை வைத்துக் கொண்டு உங்களால் எதையுமே செய்யமுடியாது. உங்களுக்குள் நீங்கள் மலர்ந்திருந்தால், தற்பெருமை எதுவும் இல்லாமலேயே செயல்பட முடியும். முழுக்கமுழுக்க தூய விழிப்புணர்வோடு நீங்கள் செயற்பட முடியும். தற்பெருமை இல்லாத இடத்தில் தவறான எண்ணமும் இருக்காது. ஏனென்றால் தற்பெருமையும் தவறான எண்ணமும் வெவ்வேறல்ல.

நீங்கள் எதன் மீதாவது தற்பெருமை கொண்ட அந்தக் கணமே வேறொன்றின் மீது தவறான எண்ணம் உங்களுக்கு வந்துவிடுகிறது; இல்லையா? நான் பெருமைமிக்க இந்தியன் என நான் சொல்லும் போதே இந்தியன் அல்லாத வேறு எவர் மீதோ தவறான எண்ணம் இயற்கையாகவே வந்துவிடுகிறது. ஆக, தற்பெருமை என்பதே தவறான எண்ணத்திலிருந்து தான் உருவாகிறது. ஆனாலும் முட்டாள்களை செயல்படத் தூண்டுவதற்கு இவை தேவைப்படுகின்றனவே.

நிறைய மக்கள் பேதைகளாக (முட்டாள்களாக) இருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் புத்திசாலிகளாக ஆகும்வரை நீங்கள் காத்திருக்க முடியுமா? முடியாது. அதுவும் முட்டாள்தனமாகத்தான் இருக்கும். எனவே கழுதைகளையும் நீங்கள் வேலை செய்யவைக்க வேண்டும். கழுதை முட்டாள்தனமானதுதான்; அப்படித்தானே? ஆனால் அது பயன் இல்லாததா என்ன? அதுபோலவே நான் பேதை, முட்டாள் என்று சொல்லும் யாரையும் பயனற்றவர்கள் என்று சொல்லவில்லை.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்-ஒரு நோக்கு

04

### ஈழத்தில் சிறுவர் இலக்கியத்தின் தோற்றம்

ஈழத்திருநாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே சிறுவர் இலக்கியம் முகிழ்த்ததென்பர். வசனநடை கைவந்த வல்லாளரென்றும் ஐந்தாம்குரவரென்றும் போற்றப்பெற்ற.... ஆறுமுக நாவலரே ஈழத்தில் சிறுவர் கதைக்குக் கால்கோளிட்டவராவார். இவர் தாமெழுதிய இரண்டாம் பாலபாடம் என்னும் நூலில் சிறுவர்களுக்கென 21 கதைகளைப் படைத்துள்ளார். இக்கதைகள் சிறுவர்களின் உள்பாங்கிற்கு அமைவாகவும் அவர்களது அறிவு, ஆற்றல்களைக் கருத்தில் கொண்டும் படைக்கப்பட்டனவாகும். இவற்றைவிட மெய்மை என்னும் தலைப்பிலும் மற்றொரு கதையினை நாவலர் இந்நூலில் எழுதியுள்ளார். பாலபாடம் மூன்றாம் புத்தகத்தில் இயுக்த்தியுள்ள தீர்ப்பு, பேராசை பெரும்துயர், பொய்வேடம், சற்புத்திரர், செய்ந்நன்றிகொன்றவர் கெடுவர், என்னும் கதைகளை எழுதியுள்ளார்.

ஈழத்திலும் தமிழகத்திலும் வேறொருவரும் சிறுவர்களைப் பற்றிச் சிந்திக்காதபோது நாவலர் பெருமானே சிறுவர்களைப் பற்றிச் சிந்தித்து அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன் சிறுவர்க்கான கதைகளை எழுதி வழிகாட்டினார் என்பதை நாம் என்றும் மறத்தல் ஆகாது. இதே வேளையில் ஆர்னல்ட்சதா சிவம் பிள்ளையின் பணியும் நினைவு கூரத்தக்கது.

சிறுவர்களின் அறிவுவளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவன கதையும் பாடல்களுமாகும். இந்த இருதுறைகளிலும் ஈழத்தவர், தமிழகத்தாருக்கு முன்னோடிகளாகவே திகழ்ந்துள்ளனர். நாவலர் காட்டிய வழியில் பாடநூல்களாகவும் துணைப்பாடநூல்களாகவும் பல எழுந்துள்ளன. அவற்றில் இதிகாச, புராண காவியங்களின் சுருக்கங்களாகவும் கிளைக் கதைகளாகவும் பல படைக்கப்பட்டுள்ளன.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் கீதோபதேசம், சிசுபாலசரிதம் என்பன இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். நற்றமிழ் அறிஞர் வண. பிரான்சிஸ் கிகங்ஸ்பரி எனப்படும். அழகுசுந்தர தேசிகர் சிறுவர்களுக்கு ஏற்ற முறையில் இலகுநடையில் இராமன்கதை, பாண்டவர்கதை என்னும் இருநூல்களை எழுதியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் வடஇலங்கை தமிழ்நூற்பதிப்பகம் நமது சிறார்களின் மொழிஅறிவை விருத்திசெய்யும் நோக்கில் இராஜா தேசிங்கு, தமயந்தி, சாவித்திரி, குசேலர்சரிதம், பரதன் போன்ற நூல்களை வெளியிட்டது.

### சிறுவர்பாடல்கள்

ஈழத்தில் சிறுவர்பாடல்களைப் படைக்கும் முயற்சி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில்-1886ஆம் ஆண்டிலேயே தோன்றிவிட்டது. ஈழத்தவரான ச.தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் பால்யக்கும்மி என்னும் சிறுவர்க்கான பாடல்நூலை வெளியிட்டுள்ளார். இதுவே ஈழத்திலும் தமிழகத்திலும் முதன்முதலில் வெளிவந்த சிறுவர் பாடல் நூலாகும். இருபதாம் நூற்றாண்டு ஈழத்துச் சிறுவர்இலக்கியத்தின் பொற்காலம் எனலாம். இந்நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் ஈழத்தின் சிறந்த ஆற்றல்மிகு குழந்தைக் கவிஞர்களைத் தமிழ்கூறும் நல்லுலகுகாணும் வாய்ப்பினைப் பெற்றது.

குழந்தைகள் பெரிதும் விரும்புவன பாடல்களேயாகும். எளிய சொற்களில் இனியசந்தத்தில் அமைந்த பாடல்களை அவர்கள், தாளம் போட்டு ஆடிப்பாடி ஆனந்தமுறுவர். அத்தகைய பாடல்களை அக்காலப் பகுதியில் வாழ்ந்த குழந்தைக்கவிதை முன்னோடிகள் பலர் இயற்றியுள்ளனர். இந்தவகையில் 1918இல் ச.வைத்தியநாதர் என்பவர் குழந்தைப் பாடற்றொகுதியொன்றை "தமிழில் பாலபோதினி" என்னும் பெயரில் வெளியிட்டார். இதுவே ஈழத்தில் வெளியான முதன்முதலில் வெளியான குழந்தைப்பாடற்றொகுதியாகும். இதுபற்றி கனக.செந்திநாதன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ்நாடு குழந்தைஇலக்கியம் முக்கியமாக கவிதைகள் பற்றி சிந்திக்கும் முன்பே ஈழத்தில் இது தோன்றி வளரத்தொடங்கிவிட்டது. பல பாடற்றொகுதிகளை ஈழத்துச் சான்றோர்கள் தொகுத்து வெளியிட்டு நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள்... வித்தியாதிகாரி அவர்களின் விருப்பத்தின்படியும் அனுமதிப்படியும், இலங்கை அரசாட்சியாரின் பிரதான தமிழ் முதலியாராகிய ச.வைத்தியநாதரால் தமிழ்ப் பாலபோதினி என்ற குழந்தைப் பாடல்களின் அபிநயப்பாடல்கள் கொண்ட தொகுதியொன்று தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு இத்துறையில் காலெடுத்து வைக்க எத்தனையோ வருடங்களுக்கு முன்பே ஈழம் முயற்சித்துள்ளது பெருமைப்படத்தக்கதாகும்."

த. துரைசிங்கம்
(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்)

வடபெரும்பாக வித்தியாதரிசியாக விளங்கிவரும் உளவியல் அறிஞரும் இலக்கிய ஆர்வலருமான க.ச.அருணந்தி அவர்கள் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். அவர் பணிபுரிந்த காலப்பகுதியில் பாடசாலைகளில் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் கற்பிப்பதற்கு உகந்த பாடல்கள் இல்லாமையை அவதானித்தார். இசையும் அசைவும் குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்ந்திட உதவும்வகையில் பாடல்கள் படைக்கப்படவேண்டும் எனப்பெரிதும் விரும்பினார். அந்நாளில் ஒரு சில பாடல்களையே பிள்ளைகளுக்குத் திரும்பத்

(தொடரும்)

# கடாபியின் ஆட்சிக்கு சமாதி கட்டுவதில் அமெரிக்காவின் சி.ஐ.ஏ.க்கு முக்கிய பங்கு

## நியூயோர்க் ரைம்ஸ் தகவல்

லிபிய நாட்டில் ஜனாதிபதி முவம்மர் கடாபியைப் பதவியிலிருந்து அகற்றுவது என்ற முடிவை அமெரிக்காவில் யார் எடுத்தார்களோ அந்தப் பணியில் முன்னணியில் இருப்பது அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ.தான் என்கிறது நியூயோர்க் டைம்ஸ் நாளேடு.

கடாபியின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுத்த ஜனநாயகவாதிகளுக்கு உதவும் நடுநிலையாளர்களைப் போல சி.ஐ.ஏ. முகவர்கள் அவர்களை அணுகினார்கள். அவர்களுடைய போராட்டத்துக்கு எல்லாவித ஆதரவும் தருவதாக உறுதி அளித்தார்கள். பணம், ஆயுதம் போன்றவற்றைத் தருவதாக வாக்குறுதி அளித்ததுடன் சில சிறிய உதவிகளையும் உடனுக்குடன் அளித்தார்கள்.

இதனால் ஜனநாயக ஆதரவாளர்கள் பலரும் அவர்கள் சி.ஐ.ஏ. முகவர்கள் என்ற சந்தேகமே ஏற்படாமல் நாட்டு அரசியல் நிலவரம் குறித்து விவாதித்தார்கள். சி.ஐ.ஏ. முகவர்கள் தங்களுடைய அமைப்பு மூலம் திரட்டிய தகவல்களுடன் அரசு எதிர்ப்பாளர்கள் கூறிய தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்து லிபிய அரசின் நடவடிக்கைகளைத் துல்லியமாகக் கணித்தார்கள்.

அத்துடன் லிபிய இராணுவத்தின் படைபலம், படைகள் இருக்கும் இடம், படைகளின் நடமாட்டம், அதிகாரிகளின் நிர்வாக அமைப்பு, லிபிய இராணுவத்திடம் உள்ள ஏவுகணைகள், மிகப் பெரிய ஆயுதங்கள், ஆயுதக் கிடங்கு, இரகசியத் தகவல் மையங்கள், கேந்திர இராணுவ மையங்கள், தகவல் தொடர்பு கட்டமைப்பு, லிபிய இராணுவத்துக்கு உதவிகள் வரக்கூடிய வழிகள் ஆகிய அனைத்தையும் அறிந்து அமெரிக்க இராணுவத்துக்குத் தகவல் தந்தனர்.

கடாபியின் கவச வாகனப் படைகளும் டாங்கிகளும் எங்கு, எத்தனை எண்ணிக்கையில் இருக்கின்றன. அடுத்து எங்கே செல்கின்றன என்று தகவல் திரட்டி அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைப்பிரிவுக்குத் தெரிவித்தனர். அவர்களது டாங்கிகளை தங்களுக்குச் சாதகமான இடத்தில் குண்டு வீசி கொத்துக்கொத்தாக அழித்தனர்.

அத்துடன் லிபிய தரைப்படையின் பீரங்கி படைப்பிரிவு, ஏவுகணைகளை ஏவ உதவும் தளங்கள் ஆகியவற்றையும் நேட்டோ தாக்கி அழிக்க சி.ஐ.ஏ. தகவல்கள் உதவின.

லிபியாவில் அரசுக்கு எதிராகப் போராட்டம் தொடங்கிய ஜனநாயக ஆதரவாளர்களுக்கு ஆயுதங்களையும் உதவிகளையும் அளிக்க இரகசிய ஆணையொன்றில் ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டார்.

அதில் குறிப்பிடப்பட்ட வகையில் பணமும் பிற உதவிகளும் தரப்பட்டன. ஆனால், ஆயுதங்களைத் தரத்தான் அமெரிக்க இராணுவத் தலைமையகம் தயங்குகிறது.

கடாபியை எதிர்க்கிறார்கள் என்பதற்காகவே ஆயுதங்களைக் கொடுத்துவிட்டால் நாளை அவர்கள் அமெரிக்காவையும் எதிர்க்கத் தொடங்கினால் என்னாவது, ஆயுதங்களை அவர்கள் வேறு யாரிடமாவது ஒப்படைத்து விட்டு அல்லது விற்றுவிட்டு இந்த எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டால் என்ன செய்வது என்பது புரியாததால் இப்போதைக்கு ஆயுதங்களைக் தராமலேயே காலத்தைக் கடத்துகின்றனர்.

லிபியாவில் பாலைவனம் மிகப் பரந்த சமவெளியாகக் காட்சி தருகிறது. அத்துடன் மப்பும் மந்தாரமுமான மேகக் கூட்டமோ, பனி மூட்டமோ இல்லை. எனவே, அமெரிக்காவின் குண்டுவீச்சு விமானங்களும் ஆள் இல்லாத ஏவுகணை வீச்சு விமானங்களும் எளிதாகப் பறந்துவரவும் லிபிய இராணுவ இலக்குகளை குறி பிசகாது தாக்கவும் முடிகிறது.

அத்துடன் அமெரிக்காவின் உளவு செயற்கை கோள்களும் ஆள் இல்லாமலேயே பறந்து இலக்கைத் தாக்கக்கூடிய டுரோன் ரக விமானங்களும் லிபியாவை அங்குலம் அங்குலமாக படம் பிடித்துக் காட்டிக் கொண்டே இருக்கின்றன.

எனவே, அமெரிக்காவின் கழுகுக் கண்களிலிருந்து லிபியா தப்பவே முடியாது என்று தோன்றுகிறது. லிபியாவை நேட்டோ தாக்கினாலும் அதன் கண்ணாகவும் கரங்களாகவும் செயற்படுவது சி.ஐ.ஏ.தான் என்று தெரிகிறது. (ஸ்ரீ-2)




## எகிப்தில் ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தல்

(கெய்ரோ)

எகிப்து நாட்டில் ஜனாதிபதி முபாரக்குக்கு எதிராக நடந்த போராட்டத்தைதொடர்ந்து அவர் நாட்டை விட்டு ஓடிவிட்டார். இதன் பின் இராணுவத் தளபதிகள் தற்காலிகமாக ஆட்சி செய்து வருகிறார்கள். புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதம் நடைபெறும் என்று இராணுவ ஆட்சி குழு தெரிவித்துள்ளது.

செப்டம்பர் மாதம் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. இது முடிந்த ஒன்று அல்லது இரண்டு மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். ஜனாதிபதி தேர்தலில் நோபல் பரிசு பெற்ற முகமது எல்பாரடே, அரபு லீக் தலைவர் அமர் மூசா ஆகியோர் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் முபாரக் ஆட்சிக்காலத்தில் நடைமுறையில் இருந்த அரசியல் சட்டம் அவர் ஆட்சி கவிழ்ந்ததும் இடை நிறுத்தப்பட்டது. அதை நீக்கும் வகையில் புதிய இடைக்கால அரசியல் சட்டம் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இடைக்கால அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கான உத்தரவை இராணுவ ஆட்சிக்குழு அறிவித்தது. (ஸ்ரீ-2)

## தாய்லாந்தில் வெள்ளம்; 25 க்கும் மேற்பட்டோர் பலி

தாய்லாந்து நாட்டின் தெற்கு பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 25 க்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

தாய்லாந்து நாட்டில் கடந்த பத்து தினங்களுக்கும் மேலாக பெய்துவரும் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து காவோபனாம் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் வெள்ளத்தில் சிக்கியவர்களை தேடும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## அவுஸ்திரேலியாவில் இந்துக்கோயில் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்



(கான்பரா)

அவுஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் இருக்கும் இந்துக்கோயில் மீது இனம்தெரியாத மர்மநபர்கள் தாக்குதல் நடத் தியுள்ளனர்.

ஆபர்ன் மாகாணத்தில் ஸ்ரீ மந்திர் கோயில் உள்ளது. இந்தக் கோயிலினுள் நுழைந்து முகமூடி அணிந்த 2 மர்மநபர்கள் கையில் இருந்த துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த 19 ஆம் திகதியன்று இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் அதிர்ஷ்டவசமாக யாரும் உயிரிழக்கவில்லை. பலத்த காயமடைய வில்லை.

கோயில் சுவரில் சன்னங்கள் துளைத்துக் கொண்டு சென்றதற்கான அடையாளங்கள் மட்டும் உள்ளன. இதே கோயிலை கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் குறிவைத்து மர்மக் கும்பல்தாக்கி வருவதாக கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். சம்பவம் குறித்து பொலி ஸார் விசாரித்து வருகின்றனர். (ஸ்ரீ-2)

ஜப்பான் சுனாமி எதிரொலி

## இலத்திரனியல் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

ஜப்பானில் கடந்த 11 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி காரணமாக இலத்திரனியல் பொருட்களின் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து உலகம் முழுவதும் ஸ்மார்ட் தொலைபேசிகள், வீடியோ கமராக்கள் போன்றவற்றின் விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் நகர விற்பனையாளர் பிலிப்பி டாவின் தெரிவித்துள்ளார்.

வீடியோ கேம்ஸ் சாதனங்கள், வீடியோ கமராக்கள் மற்றும் ஸ்டில் கமராக்கள், டிவி தயாரிப்பு என ஜப்பான் நிறுவனங்கள் தயாரித்து உலகம் முழுவதும் விற்பனை செய்து வருகின்றன.

மேலும் மேற்கண்டவைகளுக்கு தேவையான செமிகண்டக்டர் பாகங்கள் உற்பத்தி செய்யும் பெரும்பாலான நிறுவனங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நிறுவனங்கள் எதிர்வரும் மே மாதத்தில் மீண்டும் செயற்பட ஆரம்பிக்கும். முழு உற்பத்தியை அடைய ஆண்டு இறுதியாகி விடும் என்பதால் பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரித்து அதன் விலை உயரும் நிலை ஏற்படும் என தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



இங்கிலாந்து இளவரசர் வில்லியம் -கேத் மிடில்டன் ஆகியோரின் திருமண வைபவம் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவிருப்பதையொட்டி லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனை புதுப்பிக்கப்பட்டு அழகாக மிளிர்கிறது. இங்குதான் புதுமண தம்பதிகளின் வரவேற்பு நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

# பங்கு முதலீடுகள் செல்வந்தர்க்கு மட்டுமா?

# அல்லது பாமர மக்களுக்கும் பொருத்தமானதா?

## விளக்குகிறார் முதலீட்டு ஆலோசகர் சந்துரு

**பங்குச்சந்தை முதலீடு தொடர்பாக, முதலீட்டு ஆலோசகரும், ஆஷா பிலிப் செக்கியூரிட்டிஸ் லிமிட்டட் முகாமையாளருமான எஸ்.சந்துருவிடம் கேட்டபோது அவர் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது...**

சாதாரண பொதுமக்கள் அதாவது அரச ஊழியர்கள், விவசாயிகள், நிறுவன ஊழியர்கள், சிறுவர்த்தகர்கள் தமது முதலீட்டு தெரிவாக பங்குச்சந்தையைத் தேர்ந்தெடுக்கலாம்.

பங்குச்சந்தையில் கோடீஸ்வரர்களும் பெரு முதலாளிகளும்தான் முதலிட முடியுமென தவறாக நினைக்கக்கூடாது. சில நூறு ரூபாய் முதலீட்டையே மேற்கொள்ளக் கூடியவர்களும் பங்குச்சந்தையில் முதலீட்டை ஆரம்பிக்கமுடியும்.

இந்தியாவில், இலங்கையின் தென் பகுதியில் உள்ளது போல் பங்குச்சந்தை தொடர்பான விழிப்புணர்வு வடக்கு கிழக்குப் பகுதிகளில் குறைவு.

ஒப்பீட்டளவில் இந்தியாவில் பாமர மக்களிடமும் பங்குச்சந்தை தொடர்பான அறிவு காணப்படுகிறது. நடுத்தர மட்ட மக்கள் பெருமளவில் தங்களை அதில் ஈடுபடுத்தியும் கொள்கின்றனர்.

பங்குச்சந்தைக்கு விளம்பரப்படுத்த சில சட்டக்கட்டுப்பாடுகள் காணப்படுவதால் மற்றைய நிதி நிறுவனங்கள் போல் பங்குப்பரிவர்த்தனையால் பிரபலப்படுத்திக் கொள்ள முடியாதுள்ளது. இதனால் சாதாரண பொதுமக்களிற்கு பங்குச்சந்தை தொடர்பான தகவல்கள் கிடைப்பது அரிது.

நாட்டில் ஒரு பொருளாதார பிரச்சினை ஏற்படும்போது, பங்குச்சந்தை சரிவை காட்டும்போது ஊடகங்கள் பங்குச்சந்தை தொடர்பான செய்திகளை வெளியிடுகின்றன. இதனால் மக்களிடம் பங்குச்சந்தை தொடர்பாக ஓர் எதிர்மறையான எண்ணம் உருவாகிவிடுகிறது.

பங்குச்சந்தை நடவடிக்கைகள் ஒவ்வொருநாளும் அறிக்கையிடப்படுவதால் அன்றைய செயற்பாட்டை மட்டும் கொண்டு பங்குச்சந்தை உயர்ந்து விட்டது, சந்தை சரிந்து விட்டது என முடிபெடுக்கக்கூடாது.

3 மாதமோ 6 மாதமோ நீண்டகால அடிப்படையில் பங்குப்பரிவர்த்தனை உயர்வான பெறுமானத்தையே காட்டிவருகிறது. ஆகையால் உங்கள் முதலீடு நீண்டகால நோக்கமானதாக இருக்குமானால் நீங்கள் வளர்ச்சியின் பயனை அனுபவிக்கலாம்.

அதேவேளை பங்குச்சந்தை தொடர்பான தகவல்களைக் கொண்டு வரும் தனிப்பட்டவர்கள் பங்குச்சந்தை தொடர்பான பூரண அறிவுள்ளவர்கள் என்று சொல்லமுடியாது. அவர்கள் பங்குச்சந்தை உயர்ந்து விட்டது, சரிந்து விட்டது போன்ற செய்திகளைக் கொண்டு வருவார்கள். அவர்களின் செய்திகளை நம்பி நாம் எமது முதலீட்டுத் தீர்மானங்களை எடுக்கக்கூடாது.

அதேவேளை, அதிக முதலீடுகளை மேற்கொள்ளக் கூடிய பண வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பங்குச்சந்தை தொடர்பான விளக்கம் இல்லாமல் இருப்பார்கள்.

தற்போது, பங்குச்சந்தையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களில் பல முன்னர் எமக்கு அவ்வளவு பரிசயமில்லாதவையாக இருந்தன. ஆனால் தற்போது அவை இங்குள்ளன. எடுத்துக்காட்டாகப் பார்ப்போமானால்,

அபான்ஸ், பிறவுண் கம்பனி, லாப் காஸ், யூனியன் வங்கி என அந்நிறுவனங்கள் எமக்கு அருகில் வந்து விட்டன. அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை நேரில் பார்க்கிறோம்- பார்க்கலாம். அதன்பின் அவற்றில் முதலிடலாமா? என்ற தீர்மானத்தை எடுக்க முடியும்.

கத்தரிக்காய் என்ன விலை, தேங்காய் என்ன விலை என்று தெரிந்திருப்பதுபோல் கொமர்ஷல் வங்கியின் பங்கு என்ன விலை, நவலோகா ஹொஸ்பிட்டல் பங்கு என்ன விலை எனத் தெரிந்திருக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இதனால் சாதாரண ஒரு மீன் வியாபாரியும், ஒரு தேங்காய் வியாபாரியும் பங்குச்சந்தையில் முதலிட முடியும். அவர்கள் தமது வியாபாரத்தில் பாவிக்கும் அதே உத்தியை பங்கு வியாபரத்திலும் பாவிக்கலாம்.




விலை குறையும் பங்குகளைபோது வாங்கி, விலை கூடும்போது விற்க வேண்டும்.

பங்குச்சந்தை முதலீடு அறிவுடன் அநுபவமும் சார்ந்த முதலீடாகும் எனவும் சந்துரு மேலும் தெரிவித்தார்.

பங்கு முதலீடு தொடர்பான தகவல்கள் பங்குத்தரகு நிறுவனங்களால் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. முதலிட ஆர்வமுள்ளவர்கள் யாராக இருப்பினும் பங்குத் தரகு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உங்களுக்கான ஆலோசனையை பெற்றுக் கொள்ளமுடியும். 0212221614 /0776005061 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமும் பங்குச்சந்தை முதலீடு தொடர்பில் உங்களுக்கு தேவையான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.






தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள போயிங் விமான நிறுவன உயரதிகாரிகள் உட்பட்ட அமெரிக்க வர்த்தகப்பிரதிநிதிகள் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீனை சந்தித்தனர். இச் சந்திப்பில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

விமான சேவை, உணவு, தொழில்நுட்பமும் சேவையும் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள இவர்கள் இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7240.27 | 7377.22 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6838.02 | 7024.63 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 9,821.57 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* எஸ்.எம்.பி.லீசிங்(W) (0.70), சிங்கலங்கா (985.00), எச்டிஎப்சி(1133.60), நேஷன் லங்கா (12.00), ஹெஸ்னர் (129.90).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* ரீ சிமோல் ஹோல்டர்(177.00), லேக் ஹவுஸ் பிறிண்டட்(124.50), குருவிட்ட ரெக்ஸ்ரைல்(28.50), ஏசிஎல் பிளாஸ்ரிக்(163.00), ஹன்ரஸ் (1650.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## மார்ச் பணவீக்கம் 8.6% ஆக உயர்வு

இலங்கையின் மார்ச் மாதப் பணவீக்கம் 8.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது பெப்ரவரியில் 7.8 வீதமாக காணப்பட்டது.

இதேவேளை பண்டிகைக் காலக் கேள்வி, தனவிளைவு காரணமாக மேல் நோக்கிய போக்கு இம் மாதத்திலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (2002 = 100) அளவிடப்படும் ஆண்டு சராசரி பணவீக்கம் 2011 ஜனவரியின் 6.0 சதவீதத்திலிருந்து பெப்ரவரியில் 6.1 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கமானது எதிர்பார்க்கப்பட்டவாறு 7.8 சதவீதத்திற்கு அதிகரித்தது என மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் 2011 மே மாதத்திற்குப் பின்னர் வீழ்ச்சி அடையத் தொடங்கி ஆண்டிறுதியில் 6.0-7.0 சதவீதத்தை அடையும் எனவும் எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.59 | 111.33 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 175.02 | 179.22 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 154.21 | 158.55 |
| சுவிஸ் பிராங் | 117.96 | 122.16 |
| கனேடிய டொலர் | 112.06 | 115.79 |
| அவுஸ்திரேலிய டொலர் | 112.22 | 116.01 |
| சிங்கப்பூர் டொலர் | 86.29 | 88.84 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.34 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.05 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செய்தித் துளிகள்...

### கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளர் சபையில் லக்ஸ்மன் ஹூலுகல்ல



தேசிய பாதுகாப்பு நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஹூலுகல்ல இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வங்கியிலுள்ள அரசபங்குகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அவர் வங்கியின் பணிப்பாளர் சபையில் நியமிக்கப்பட்டுள்ளார். வங்கியின் வருடாந்த பொதுக் கூட்டதையடுத்து நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போதே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### பிறி லங்கா பங்கு ஒதுக்கீடு

பிறிலங்கா ஐ.பி.ஓவுக்கு அண்ணளவாக 46 மடங்கு மிகைக்கேள்வி ஏற்பட்டிருந்த நிலையில், தற்போது பங்கு ஒதுக்கீடு தொடர்பாக அறிவித்துள்ளது. இதன்படி, ,10 ஆயிரம் பங்குகள்வரை விண்ணப்பித்தோருக்கு அவர்கள் கோரிய பங்குகள் முழுவதும் வழங்கப்படும்.,

10,001 முதல் 17,001 வரை விண்ணப்பித்தோருக்கு 10,700 பங்குகளும் ,17,001 முதல் 20,000 வரை விண்ணப்பித்தோருக்கு 11 ஆயிரம் பங்குகளும் 20,001 முதல் 200 மில்லியன் வரை விண்ணப்பித்தோருக்கு 11 ஆயிரம்+0.91% பங்குகளும் ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ரூ.55 ஆயிரம் கோடிக்கு எஸ்ஸாரை வாங்குகிறது வோடாபோன்

vodafone

வருவாய் அடிப்படையில் உலகில் மிகப் பெரும் நிறுவனம் வோடாபோன். அது எஸ்ஸார் நிறுவனத்துடன் இணைந்து வோடபோன் எஸ்ஸார் லிமிட்டர் என்ற கூட்டு நிறுவனத்தை இந்தியாவில் தொடங்கியது. அதில் எஸ்ஸாருக்கு 33 வீதம் பங்குகள் உள்ளது. இந்நிலையில் வோடாபோன் எக்ஸார் நிறுவனத்தில் எக்ஸாரின் 33 சதவீத பங்குகளை 55 ஆயிரம் கோடி ரூபாயுக்கு வாங்கவும், கூட்டு நிறுவனத்தில்இருந்து எஸ்ஸாரை வெளியேற்றவும் வோடாபோன் முடிபு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இணையத்தள வடிவமைப்புப் போட்டி முடிவுகள்

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உள்ளூர்மயமாக்கப்பட்ட செயல்களுக்கான சிறப்பு மையத்தினால் கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் தமிழ் கணிமை விழிப்புணர்வு (Tamil Computing Awareness) செயற்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கல்வி வலயங்களிலுள்ள பல பாடசாலைகளிலும் புலோலி கணனி வள நிலையத்திலும், யாழ். உயர்தொழில்நுட்பவியல் நிறுவகத்திலும் தமிழ் கணிமை சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், தமிழ் இணையத்தள வடிவமைப்பு பற்றிய பயிற்சிப்பட்டறைகள் ஆகியன நடாத்தப்பட்டன. இக்கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் ஏறக்குறைய 1000 மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஏனைய பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்த செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக யாழ்.பாடசாலை மாணவர்களுக்கான தமிழ் இணையத்தள வடிவமைப்பு போட்டி ஒன்றும் கடந்த வருடம் நடாத்தப்பட்டது. இப்போட்டியில் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கல்வி வலயங்களுக்குட்பட்ட 12 பாடசாலைகளிலிருந்து 200 க்கும் அதிகமான மாணவர்கள் 50 இற்கும் அதிகமாக இணையத்தளங்களை போட்டிக்காக சமர்ப்பித்திருந்தனர். இவ்விணையத்தளங்களில் போட்டியின் நடுவர்கள் தகுதியானது எனக் கருதும் 31 இணையத்தளங்களை முதலாவது சுற்றில் தெரிவுசெய்தனர்: இரண்டாவது சுற்று மதிப்பீட்டில் 1,2 ஆம் மற்றும் 3 ஆம் இடங்களைப் பெறும் இணையத்தளங்களும், வலய மட்டத்தில் சிறப்புப் பரிசில்கள் பெறும் இணையத்தளங்களும் தெரிவு செய்யப்பட்டன.

**முதலாமிடம்**

**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

மாணவர் குழு -அனோஷா இக்னேசியஸ், சேயாள் வேல்முருகன், றொஷானி அன்ரன் ராஜகுமார், சரண்யா உதயகுமார்.

**இரண்டாமிடம்**

**யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை**

மாணவர் குழு - சுவாஸ்திகா கிருஸ்ணகாந்தன், சிவதர்சினி சிவயோகநாதன், துஷியா சண்முகநாதன்.

**மூன்றாமிடம்**

**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

மாணவர் குழு- நதியா இராஜேஸ்வரன், திலக்சி சந்திரசேகர், துவாரகா செல்வராஜா.

**வலய மட்ட சிறப்புப் பரிசில் பெறுவோர்**

**யாழ்.கல்வி வலயம்**

யா/இந்துக் கல்லூரி (கயிலாயபதி சுதாகர்)

**வடமராட்சி கல்வி வலயம்**

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை (ஜனனி பாலசுப்பிரமணியம், பிரவீனா பத்மநாதன், காயத்ரி சிவம், சாதனா பரமநாதன்,தீபிகா சண்முகராஜா)

**தென்மராட்சி கல்வி வலயம்**

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியா லயம் (மகேஸ்வரன் சர்வேசன், கௌசிகா கணேஷ், இந்திகா சிவநேசன், ஸ்ரீ ஸ்கந்த மூர்த்தி ரூபகாணன், சித்திராங்கி சற்குண நாதன்)

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி (சுந்திரசேகர் தனுஜன், சிவபாலன் கெங்கா, செல்வரா,சா தர்சிகன், ஜெயசீலன் ஜனந்தன், ஜெயகணேசன் ஜெயதீபன்)

**வ்லிகாம கல்வி வலயம்**

யாழ் மகாஜனக் கல்லூரி (சௌந்தர்ராஜன் ஸ்ரீஹர்ஷன்)

யாழ்.மகாஜனக் கல்லூரி (இராசேந்திரம் ஜனார்த்தனன்)

பின்வரும் பாடசாலைகளைச் சேர்ந்த சிறந்த இணையத்தளங்களை உருவாக்கிய மாணவர்கள் சான்றிதழ்களைப் பெறவுள்ளனர்.

- யா/சோமாஸ்கந்த கல்லூரி
- யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
- யா/விக்னேஸ்வரக் கல்லூரி
- யா/வேம்படி கல்லூரி
- யா/பரியோவான் கல்லூரி
- யாழ் . இந்துக் கல்லூரி
- யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

மேற்படி பரிசளிப்பு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் மொறட்டுவைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தைச் சேர்ந்தோர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொள்ள வுள்ளனர் என மொறட்டுவைப் பல்கலைக் கழக உள்ளூர் மொழிகளிற்கான சிறப்புமைய இயக்கு நர் செ.சர்வேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குழந்தைகளுக்கு இருதய நோய் ஏற்பட மரபணுவே காரணம்

## ஆய்வில் தகவல்

(மெல்போர்ன்)

தற்போது பிறக்கும் குழந்தைகளுக்கு இருதய நோய்கள் ஏற்படுகின்றன. இதற்கான காரணம் குறித்து அவுஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் உள்ள விக்டர் சாய் இருதய ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது தாயின் கருவில் இருக்கும் குழந்தைகளுக்கு இருதயம் உருவாகும் போது ஏற்படும் சில மரபணு கோளாறே இதற்கு காரணம் என தெரிய வந்துள்ளது. இது நன்கு வளர்ச்சி அடையாத மரபணு அல்லது அதிரடி மாற்றங்களால் தான் புதுவிதமான இருதய நோய்கள் ஏற்படுகின்றன.

இந்த நோய்கள் கருவில் வளரும் குழந்தையின் இருதயம் உருவாகும் போது ஏற்படுவது இல்லை. மாறாக அவை இருதயத்தின் வெளிப்புறத்தில் ஏற்படுகிறது. இது குறித்து விரிவான ஆய்வை நிபுணர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆய்வுக்காக எலிகள் பயன்படுத்தப்பட்டன. அதில் சிடெடு 2 என்ற மரபணுவினால்தான் இருதய நோய் ஏற்படுகிறது என்று கண்டு பிடிக்கப்பட்டது.

அதே நேரத்தில் இந்த மரபணு இல்லாத குழந்தைக்கு எந்தவித இருதய நோயும் ஏற்படுவதில்லை. இதன் மூலம் இருதய நோய் ஏற்பட மரபணுவே காரணம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)


நல்லூர்

சரவணா ரெக்ஸ்

Saravana Tex

ஆரம்பம்: 26.03.2011 முதல் 13.04.2011 வரை

இரண்டாவது கிளையான 770, 772, கே.கே.எஸ். வீதி, தட்டாதெருச் சந்தியில் அமைந்துள்ள சரவணா ரெக்ஸ் இல் அதிவிசேட விலைக் கழிவில் விற்பனை




புதுக்கடையில் புதுவருடத்துக்கு எல்லாமே புதுசு

குறிப்பு:புதுவருடத்தை முன்னிட்டு ஏழு நாட்களும் வியாபாரம் நடைபெறும்

சிறியவர் முதல் பெரியவர் வரை ஆடைத் தெரிவுகளுக்கு

புதுவருடத்தை முன்னிட்டு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது

ரகங்கள் பலவிதம் தரத்தில் முதலிடம்

சரவணா ரெக்ஸ்

அதிவிசேட விலைக்கழிவு வழங்கப்படும்

- சிறுவர்களுக்கான இந்தியன் சூட்வகைகள் (Special Selection)
- பெண்களுக்கான ரெடிமேட் பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள். ஸ்கேட் & பிளவுஸ்கள்
- இந்தியன் பட்டுச் சாறிகள், சீக்குன் சாறிகள், திரட் வேக் சாறிகள், மைசூர்சில்க் சாறிகள் கொட்டன் சாறிகள் கஸ்மீர் சாறிகள் எனப் பலபல விதமான இந்தியன் பன்சி சாறிகள்
- மற்றும் ஆண்களுக்கான சேட், Vantage, Ebony. T. சேட், ரெடிமெட் ஜீன்ஸ், ஜீன்ஸ் துணிகள் என பல பல டிசைன்களில் புதிய தெரிவில் பெற்றுக்கொள்ள
- மற்றும் பலவிதமான எண்ணற்ற டிசைன்களில் முழுக் குடும்பத்துக்கும் ஏற்ற ஆடைத் தெரிவுகளுக்கு

இரண்டு கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

770, 772, கே.கே.எஸ். வீதி, (தட்டாதெருச் சந்தி) யாழ்ப்பாணம். T.P: 021 222 0421 Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின்வீதி) , யாழ்ப்பாணம். T.P:021 222 1723

(சி-2439)

# "தவக்கால இசைத்தருக்கள்" இறுவட்டு வெளியீட்டு விழா

திருமறைக்கலாமன்றத்தால் வெளியிடப்படும் இறுவட்டுக்களின் வரிசையில் புதிதாக வெளியிடப்படும் ''தவக்கால இசைத்தருக்கள்'' எனும் இறுவட்டு வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் திருமறைக் கலாமன்ற இசைப்பிரிவுப் பொறுப்பாளர் இசைத்தென்றல் ம.யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா,சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் அருள்திரு ஞா. பிலேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக் கவுள்ளனர்.வெளியீட்டுரையை திருமறைக்கலா மன்ற பிரதி இயக்குணர் யோ. யோன்சன் ராஜ்குமார் நிகழ்த்தவுள்ளார்.

கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியத்தில் வழங்கி வந்த துன்பியல் இராகங்களின் தொகுப்பாக வருடாவருடம் திருப்பாடுகளின் காட்சியை முன்னிட்டு தவக்கால இறுவட்டு வெளியிடப்படுவது குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

யா/வயாவிளான் மத்தியமகாவித்தியாலய பழைய மாணவர் ஒன்று கூடலும் வருடாந்த பொக்கூட்டமும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் மற்றும் பாசாலை அதிபர் க.கனகராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இவ் வருடத்திற்கான புதிய உத்தியோகத்தர் தெரிவு இடம் பெறுவதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர்கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# முகாமை உதவியாளர் நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டோருக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாணஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் தெரிவு செய்யப்பட்ட நியமனதாரிகள் தங்களுக்குரிய நியமனக் கடிதத்தைப் பெற்று வழங்கப்பட்ட சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்ற வேண்டுமென மாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

வட்டுக்கோட்டை அராலி மத்தி உலோலைசிட்டி அருள்மிகு விநாயகர் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பற திருவிழாவும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு தீர் தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடி யிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3)

# பரிசில் வழங்கல் வைபவம்

இலங்கைப் பொச' நூலக சனசமூக நிலையத்தின் புனருத்தா ண ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவின் பரிசில் வழங்கல் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் தலைவர் சொ. ஹரி சங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்புவிருந்தினர்களாக சட்டத்தரணி செல்வி ஞானலோயினி சிவலிங்கம், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி உப அதிபர் வி.கலைநேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.கௌரவ விருந்தினர்களாக யா/கந்த ரோடை தமிழ் கந்தையா வித்தியாலய ஆசி ரியர் ந.புஸ்பராசா , லண்டனைச் சேர்ந்த கி.கோபிகிருஸ்ணா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3)

# இராசி பலன்

03-04-2011

பங்குனி 20 ,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08மணிக்கு
அமாவாசை முன்னிரவு8.40மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 2.56 மணிவரை
இராகுகாலம் 4.40- 6.10 மணிவரை
சுபநேரம் 9.10-10.40 மணிவரை
அமாவாசை விரதம் ,குழந்தை வேற் சுவாமிகள் குருபூசை, நான்காம் தவக்கால ஞாயிறு

**மேடம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்,சுபசெலவுகள் அதிகரிக்கும்,தொழிலில் புதிய மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகத்கால் பொருளாதார நிலை உயரும்,வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,கௌரவமான நாள்.

**மிதுனம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம் ,வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிங்கம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகலாம், வாகனங்களில் செல்லும்போது விழிப்புணர்ச்சி தேவை.

**கன்னி** பெண்களின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும்,நட்புவட்டம் விரிவடையும்,மாலைநேரப்பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், எதிர்பார்த்த தொகை வந்துசேரும், வியாபாரவிருத்திக்கு வித்திடுவீர்கள், எதிரிகள் உதிரியாகுவர், சுவாரஸ்யமான நாள்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும், தொழில் வளர்ச்சிகருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கலாம், புதியதிட்டங்கள் திட்டுவீர்கள்.

**தனுசு** பம்பரமாக சுழன்று பணிபுரிவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், வாகன மாற்றம் பற்றிய சிந்தனைகள் தோன்றும்.

**மகரம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், சகோதர வழி ஒற்றுமையால் புத்துணர்வு பெறுவீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்** விரதங்களில் நம்பிக்கைகூடும், எதிர்பார்ப்புக்கள் எளிதில் நிறைவேறும், பணவரவுதிருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** ஆரோக்கியம் சீராக மாற்றுமருத்துவத்தை நாடுவீர்கள், திடீர் பயணத்தால் திசை திருப்பல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## பாதுகைப் பாதுகாப்பு

"என்ன சேர்... இது கோலம்? கையில் ஒரு செருப்பை மட்டும் வைத்துக்கொண்டு வெறுங்காலோடு ஓடிக் கொண்டிருக்கிறீங்க?"

"கல்யாண வீட்டு வாசலில் கிடந்த என் செருப்பை ஒருத்தன் திருடிக் கொண்டிருந்தான். நான் அதைப் பார்த்துவிட்டேன். உடனே அவசரத்தில் ஒரு செருப்பை மட்டும் தூக்கிக் கொண்டு இந்த வழியாகத்தான் ஓடினான். அவனைத் தான் துரத்திக்கொண்டு ஓடுகிறேன்."

''பாதணிகளை எப்பொழுதும் கவனமாகப் பாதுகாக்கவேண்டும்"

"பாதுகையை பாதுகாத்துவைப்பதற்கு நாம் என்ன பெரிய மகான்களா"

"என்ன சொல்றீங்க?"

"மகான்களுடைய பாதுகைகளைத்தான் பத்திரமாக பாதுகாக்க வேண்டும். இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பாதுகைகளை 100 வருடத்திற்கு மேலாக பத்திரப்படுத்தி பாதுகாத்துக் கொண்டு வருகிறார்களாம்,"

"எங்கே?"

"கர்நாடகா மாநிலத்திலுள்ள பேலூர் மடத்தில் அதை எப்படிப் பாதுகாப்பது என்று சில நிபுணர்களையெல்லாம் கூப்பிட்டு ஆலோசனை கேட்டுத் தெரிந்து கொண்டார்களாம்."

''மகான்கள் உபயோகப்படுத்திய பாதணிகளுக்கு எவ்வளவு மகத்துவம் பார்த்தீர்களா?"

"என் காலணியின் மகத்துவம் எனக்குத்தான் தெரியும் அதனால்தான் அவனைத்துரத்திக் கொண்டு ஓடுகிறேன்"

''போனாப்போகிறது விடுங்க சேர்... அவனை கண்டுபிடித்து அந்த ஒரு செருப்பை வாங்குவதை விட புதுசா ஒரு சோடி வாங்கிக் கொள்ளலாம்."

"அவனிடமுள்ள செருப்பை வாங்குவதற்காக நான் ஓடவில்லை."

"பின்னே... ?

"என்னிடமுள்ள இதையும் அவனிடம் கொடுத்து விடுவதற்காக ஓடுகிறேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 100 | 90 |
| தக்காளி | 80 | 150 | 100 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 80 | 80 | 70 |
| கரட் | 100 | 140 | 160 | 150 |
| பூசணி | 45-50 | 50 | 60 | 60 |
| புடோல் | 35 | 50 | 60 | 70 |
| வாழைக்காய் | 45-50 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 80 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 70 | 60 |
| கரணைக்கிழங்கு | - | 80 | - | 90 |
| பயிற்றங்காய் | 70 | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 50 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | - | 140 | 140 | 130 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 500 | 500 |
| போஞ்சி | - | 100 | 160 | 150 |
| கத்தரி தம்புள்ள | 30 | 40 | 50 | 30 |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50-60 | 40 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

பெற்ற தாய் பிச்சையெடுக்க மகன் கும்ப கோணத்தில் கோதானம் செய்தானாம்.
– *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இனப்பிரச்சினை தீர்வதற்காக இறைவழிபாடு செய்யாரோ!

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெறுவதற்காக இலங்கை ஆட்சியாளர்களும், படைத்தரப்பும் ஆலயங்களுக்குச் சென்று கையேந்துகின்றனர்.

திருப்பதியானே! நல்லூர் முருகா! நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கு வெற்றி தா என்று அவர்கள் இறைஞ்சுகின்றனர்.

எதெதற்கு இறைவனிடம் வேண்டுதல் செய்வதென்ற விவஸ்தை இல்லாமல் போய்விட்டது.

சாதாரண கிரிக்கெட் போட்டியில் வெல்ல வேண்டுமென இறைவழிபாடு செய்கின்றவர்கள் இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர வேண்டும், எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர வேண்டும், விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்திகள் மேன்மையடைந்து இலங்கைத் திருநாடு பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும் அடைந்து அமைதியான – சுபீட்சமான – நாடாக விளங்க வேண்டுமென இறைவனை இறைஞ்சியிருந்தால் அது அர்த்தமுடையதாக இருந்திருக்கும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் தங்கள் வாழ்விடங்களுக்குச் செல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

தறப்பாளின் கீழ் அவர்களின் சீவியம் நடக்கிறது. இதற்கு மேலாக தங்கள் குடும்பத்துடன் மகிழ்வாக வாழவேண்டிய தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் சிறைகளில் அடைக்கப்பட்டு மீட்சியின்றித் தவிக்கின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கும் போது ஒரு பகுதியினர் கிரிக்கெட் போட்டியில் வெல்வதற்காக வழிபாடு செய்கின்றனர்.

எங்கள் நாட்டின் பொருளாதாரம் பற்றி ஒரு கணம் சிந்தித்துப்போமாக இருந்தால் – வேதனையே மிஞ்சும்.

மத்திய கிழக்கு நாடுகளின் வீட்டுப் பணிப் பெண்களாக கடமை செய்பவர்களில் பெரும் பகுதியினர் இந்த நாட்டின் தென்பகுதியினர் என்பது முக்கியமான விடயம்.

இலங்கையில் பிறந்தமையால் மத்திய கிழக்கு நாட்டுச் செல்வந்தர்களின் வீட்டில் சட்டி, பானை கழுவும் பரிதாபநிலையில்,

எங்களுக்கு கிரிக்கெட் போட்டியில் வெற்றி தேவை. அதற்காக பூசை வழிபாடுகள்.

ஓ! உலகமே எல்லாம் நாடகம், நடிப்பு. இந்த நாடகத்திலும் நடிப்பிலும் அப்பாவிப் பொதுமக்கள் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

சிறுபான்மையினர் அடிமைகளாக வாழ்கின்றனர். இவற்றுக்கெல்லாம் விடிவில்லாத போது, மைதான விளையாட்டுகள் அர்த்தமற்றவை. முதலில் மனித இனம் மகிழ்வாக வாழும் வகை உருவாக வேண்டும். அது இல்லாத போது இவையெல்லாம் ஒரு சிறுபகுதியினரின் மகிழ்விற்கானதேயன்றி வேறில்லை.

# வடகிழக்கு மக்களின் காணிப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை

(வவுனியா)

வட கிழக்கு மாகாணத்தில் பல ஆண்டு காலமாக வாழ்ந்துவரும் மக்களுக்கு அவர்களுடைய காணிக்குரிய அனுமதிப் பத்திரங்கள் பல ஆண்டுகள் வழங்கப்படாமல் இருப்பது தொடர்பாகவும் இவ்விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கடிதம் ஒன்றினையும் அவருக்கு அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடகிழக்கு மாகாணத்தில் பல ஆண்டு காலமாக வாழ்ந்துவரும் மக்களுக்கு அவர்களுடைய காணிக்குரிய அனுமதிப்பத்திரங்கள் பல ஆண்டு காலமாக வழங்கப்படாமல் இருக்கின்றது.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் புனர்வாழ்வு வேலைத்திட்டங்களின் கீழ் அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை.

குறிப்பாக வீட்டு மானியம்' மற்றும் வீட்டுக்கடன் போன்றவை வழங்கப்படவில்லை. இந்த துக்ககரமான நிலையில் ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதற்கோர் தீர்வை இன்னும் யாராலும் முன்வைக்கப்படவில்லை. எனவே இந்த விடயத்தை அவசரமாக பரிசீலனை செய்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டிருந்தார்.

(ச–5)

## காணாமற் போன கடற்படையினரை இந்தியாவின் துணையுடன் தேடும் நடவடிக்கை தீவிரமடைகிறது

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் காணாமற் போன நான்கு கடற்படை வீரர்கள் தொடர்பில் எவ்விதமான தகவலும் இல்லை என்பதால் அவர்களைக் கண்டுபிடிக்க இந்தியாவின் உதவியை நாடியுள்ளதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

காணாமற்போன கடற்படை வீரர்களின் படகு எவ்விதமான சேதமுமின்றி வெற்றிலைக்கேணி கரையோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடற்படை பேச்சாளர் இது தொடர்பாக தொடர்ந்தும் கூறுகையில், கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த நான்கு கடற்படை வீரர்களும் மர்மமான முறையில் படகுடன் காணாமற் போயிருந்தனர்.

சம்பவம் நடைபெற்று இரண்டு நாட்களுக்குப் பின்னர் படகு மட்டும் வெற்றிலைக்கேணி கரையோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத் தீவை அண்டிய கரையோரப் பிரதேசங்களில் விசாரணைகளிலும் தேடுதல் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு காணாமற் போயுள்ள நான்கு கடற்படை வீரர்களையும் கண்டுபிடிக்க இந்திய கடற்படையினரிடம் உதவி கோரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(ச–5)

## சட்டவிரோத சிகரெட் உற்பத்தியில் ஈடுபட்ட பெண் கைதாகி விடுதலை

(கொழும்பு)

சட்டவிரோத சிகரெட் உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணொருவர் திஸ்ஸ மகாராம தெபலவேவ பகுதியில் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த பெண் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் 31 ஆயிரம் சட்டவிரோத சிகரெட்டுக்கள் அவற்றின் உற்பத்திக்காக பயன்படுத்தபட்ட மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றின் பெறுமதி 10 இலட்சம் ரூபாய் என்று தங்காலைப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் திஸ்ஸ மகாராம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ஸ்ரீ–3)

## புதுப்பார்வை பெறுவோம் இறைவழி செல்வோம்

வாழ்வியல் அனுபவங்களோடு இன்றைய உலகை சற்று ஆழமாக நோக்குகையில் பல்வேறுபட்ட புரிதல்கள் எமக்குள் எழுகின்றன. காலவோட்டத்தில் சுற்றிச்செல்லும் இப்பூமியிலே பலதரப்பட்ட மாற்றங்கள் அறிவுபூர்வமான சிந்தனைகளும், அபூர்வமான கண்டுபிடிப்புக்களும், நவீன வாழ்க்கைப் பழக்க வழக்கங்களும் இன்று மனிதனை வாழ்வின் உச்சிக்கு அழைத்துச் செல்கின்றன. உலகை அவனது கைக்குள் காட்டுகின்றன.

இதனால் ஒவ்வொருவரும் ஏதேவொருவகையில் எந்தவழியிலாவது தமது புலமைகளை நிரூபிக்கத் துடிக்கின்றனர். இதனால் எழுகின்ற பொருளற்ற போட்டிகளில் இன்று சமூகத்திலும் மூவுலகிலும் பல அவலங்களை உருவாக்கி மனித அழிவுகளுக்கு மூலகாரணமாக விளங்குவது வெள்ளிடைமலை.

சட்டத்தின் பெயரால் மனித வாழ்வை சிதைத்து,மதத்தின் பெயரால் மனிதத்தை புதைத்து,அதிகாரத்தால் இறைவழிபாட்டை தடுத்து,வாழ்வின் அகவொளியை கல்லான மனித இதயங்களால் மறைத்து, இருள் சூழ்ந்த வாழ்வுக்குள் தள்ளப் பட்ட யூத சமுதாயத்தில் வெளிச்சத்தை தருபவராக விளங்கினார் இறைமகன் இயேசு.அன்றைய அவரது போதனைகள் மக்களது அறியாமையை நீக்கின. அவரால் நிகழ்த்தப்பட்ட புதுமைகள் இறைநம்பிக்கையை வளர்த்தன. அவரது செயற்பாடுகள் உண்மை வாழ்வுக்கு அனைவரையும் அழைத்துச் சென்றன. “நான் உலகில் இருக்கும் வரை நானே உலகின் ஒளி” (யோவா 9:5)என்ற இயேசுவின் வார்த்தைகள் இருட்டுக்குள் முடக்கப்பட்ட மனிதர்கள் அனைவருக்கும் ஒரு நம்பிக்கை ஒளியையும் அவர்களது வாழ்வில் ஒரு புதிய பார்வையையும் கொடுத்தது. பலருக்கு வாழ்வு தந்த இயேசுவின் பிரசன்னமும், போதனையும் சிலருக்கு சவாலாகவும், நெருடலாகவும் இருந்தது.

“ஆண்டவன் பார்வையற்றோரின் கண்களைத் திறக்கிறார்....” (தி.பா 146:8) இன்று ஏதோவொரு விதத்தில் நாம் அனைவரும் பார்வையிழந்தவர்களாகத்தான் காணப்படுகின்றோம். அறியாமையால் வாடும் மனிதருக்கு அறிவுப் பார்வை வேண்டும்.சமூக நலன்களில் அக்கறையற்று வாழ்க்கை நடத்துபவர்களுக்கு சமூகப் பார்வை வேண்டும். வாழ்வின் பொருள் மறந்து நாளும் தம்மை அழித்துக் கொள்ளும் மனிதருக்கு ஆன்மீகப் பார்வை வேண்டும். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் பார்வை பெறவேண்டும்.

துன்ப துயரங்கள் நடுவில் கடவுளில் நம்பிக்கை குன்றாது வாழ்கின்ற மக்கள் கடவுளின் கண்களில் மிக உயர்ந்தவர்கள்.கடவுள் மனிதரை மதிப்பிடுவதும் மனிதர் உலகப் பார்வையில் மனிதரை மதிப்பிடுவது ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதை நாம் உணர்ந்திட வேண்டும். ஏனெனில் “மனிதர் முகத்தைப் பர்க்கின்றனர். ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார்.”(1 சாமு 16:7)

எமது அகக்கண்கள் திறக்கப்படவும், வாழ்வில் ஒளி நிறைக்கப்படவும் நாம் எமது பார்வை ஒரு புதுப்பொலிவை பெற வேண்டும். நன்மையை நினைப்பதும், நீதியை நிலை நாட்டுவதும், உண்மையை வாழ்வதும், இறையுறவில் வளர்வதுமே ஒளியின் மக்களுடைய செயல்கள் ஆகும். எனவே, நாம் எமது வாழ்வை நோக்க வேண்டும். உள்ளத்தை உற்றுப்பார்க்க வேண்டும்.இயேசு என்னும் தெய்வீக ஒளியால்



### பரமபிதா காட்டிய பாதை

எம்மில் குடிகொண்டிருக்கும் இருளின் மாயைகளை இல்லாதொழிக்க வேண்டும்.எமது பார்வைகள் இயேசுவின் பார்வைகள் போன்று அமையவும், எமது அயலவரில் இயேசுவை நாம் கண்டு மகிழவும் புதிய பார்வை பெற்று வாழ்வோம்.

அருட் சகோதரர் ரமேஸ் அ.ம.தி




# குள்ளநரிக் கூட்டம்

அப்பா நல்லாசிரியர், அண்ணன் நல்ல வேலையில் இருப்பவர், தமிழ் சினிமாவின் இலக்கணப்படி ஹீரோ தம்பி, வெட்டி அலுவலராக இருக்க வேண்டும். அவருக்கு காதல் வரவேண்டும். அவரது காதலை குடும்பமே ஆதரிக்க, அப்பா மட்டும் வில்லனாக விறைப்பு காட்ட வேண்டும்.

அத்தனையும் அப்படியே ஆஜர். அப்பா செல்லுக்கு ரீ சார்ஜ் செய்யப் போன இடத்தில் தவறான நம்பருக்கு ரீ சார்ஜ் செய்துவிடுகிறார் விஷ்ணு. அந்த நம்பர் ஹீரோயின் ரம்யா நம்பீசனுடையது. காதல் உருவாக இதைவிட வேறென்ன காரணம் வேண்டும்? விஷ்ணு ரம்யாவிடம் பணத்தை திருப்பிக் கேட்க, அவர் இழுத்தடிக்க இந்த உரசலில் காதல் தீ பற்றிக் கொள்கிறது. விஷ்ணு, நேரடியாகச் சென்று பெண் கேட்க, ரம்யாவின் அப்பா, எங்க குடும்பம் பொலிஸ் குடும்பம். நீ பொலிசாகிட்டுவா. என் பெண்ணை தருகிறேன் என்று சொல்கிறார். விஷ்ணுவின் அப்பாவுக்கோ பொலிசை கண்டாலே பிடிக்காது. இந்த சிக்கலில் இருந்து வெளிவந்து விஷ்ணு காதலியை எப்படி கைபிடிக்கிறார் என்பது கதை.

அடக்கமான ஹீரோவாக வலம் வருகிறார் விஷ்ணு. பொலிஸ் தேர்வில் தனக்கு உபத்திரம் கொடுக்கும் அதிகாரியை கூட எதிர்த்து பேசாமல் உள்ளுக்குள் வருந்தும் அளவுக்கு யதார்த்தமான நடிப்பால் கவர்கிறார். தகுதியான தனக்கும் நண்பர்களுக்கும் பொலிஸ் வேலை மறுக்கப்படும்போது, அவங்க நரிகூட்டம்னா நாம குள்ளநரி கூட்டம் என்று கிளம்பிய பின்னர் புத்திசாலித்தனமான அவரது நடவடிக்கைகள் சுவாரஸ்யமானவை.

விஷ்ணுவின நண்பர்களாக, வெண்ணிலா கபடிக்குழு அணி. பொலிஸ் கிரவுண்டிலேயே டீ விற்றுக்கொண்டு பொலிஸ் வேலைக்கு முயற்சிக்கும் அப்புக்குட்டி மனைவியின் ஆசைக்காக பொலிஸ் வேலைக்கு வந்திருக்கும் பரோட்டா சூரி, அப்பாவின் உபத்திரத்தால் தெரிவிற்கு வந்திருக்கும் ஐயப்பன் உள்ளிட்ட நண்பர்கள் குழு, பொலிஸ் தெரிவிற்கு அடிக்கும் காமெடிகள் கலகல ஏரியா. ரம்யா நம்பீசனுக்கு அதிக வேலை இல்லை. ஆனாலும் யதார்த்தமான நடிப்பால் மனதை கவர்கிறார். இவர்கள் தவிர புதுமுகங்கள் தேர்வும் அவர்கள் நடிப்பும் ஆச்சர்யம். குறிப்பாக விஷ்ணுவின் தந்தை இயல் இளங்கோ, தாய் பாண்டியம்மாள் ஆகியோரின் நடிப்பு அற்புதம். செல்வ கணேசின் இசையில் பாடல்கள் கேட்க வைக்கும் ரகம்.

இந்த தகுதியோடு வந்தால் என் மகளை கட்டித் தருவேன் என்று காதலியின் அப்பா சொல்வதும் அதற்காக காதலன் போராடுவதும் பழைய கதை களம் என்றாலும், சின்ன சின்ன விடயங்களில் புதிதாக விளையாடியி ருக்கிறார் இயக்குநர்.

கண்டவுடன் காதல், தவறான பொலிஸ் அதிகாரிகளை அடையாளம் காட்ட போடும் டி.வி. நிகழ்ச்சித் திட்டம் போன்றவற்றில் என்ன லொஜிக்கோ? விஷ்ணுவின் அப்பா பொலிசை வெறுப்பதும் ரம்யாவின் அப்பா பொலிஸ் மாப்பிள்ளைதான் வேண்டும் என்பதும் அக்மார்க் டிராமா கரு.




## 18வயது இளைஞனாக நடிக்கிறார் விக்ரம்!

நாற்பத்தைந்து வயதுக்காரரான சீயான் விக்ரம் புதிய படமொன்றில் 18 வயது இளைஞனாக நடிக்கிறார். இதென்ன கூத்து? என நினைக்காதீர்கள். டைரக்டர் விஜய் இயக்கத்தில் விக்ரம் நடித்து வரும் புதிய படம் தெய்வ திருமகன். இந்த படத்தில் தான் அவர் 18 வயது இளைஞனாக நடிக்கிறாராம். இதற்காக அவர் பலமடங்கு உடல் இளைத்திருக்கிறாராம். அதுமட்டும்மல்ல... இந்த கெட்டப் வெளியே தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக வெளியிடங்களில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளுக்குகூட வராமல் தவிர்த்துவந்தார் விக்ரம். இதுவரை கசியாமல் இருந்த இந்த செய்தியை விரைவில் படம் ரீலீஸ் ஆகவிருப்பதால் இப்போது லேசாக கசிய விட்டிருக்கிறார்கள். எந்த கேரக்டராக இருந்தாலும் ரொம்பவே முயற்சித்து நடித்து வெற்றிபெறும் சீயான். இந்த சவாலான கேரக்டரையும் சிறப்பாகவே செய்திருப்பார் என நம்புவோம். அப்பா, தாத்தா கேரக் டரில் நடிக்க வேண்டிய ஐம்பத்தெட்டு, அறுபது வயசுக்காரர்களெல்லாம் 18 வயது இளம் ஹீரோயினிகளுடன் ஜோடிபோட்டு டூயட் பாடிக் கொண்டிருக்கும் சினிமா உலகம்தான் இது?






## வடிவேல் கிண்டல்; விஜயகாந்த் கடுப்பு

நாளை கழிச்சி முதலமைச்சர் ஆகப்போகிறேன் என்று சொல்லிக்கிட்டு திரியறான் ஒருத்தன்; எந்நேரமும் தண்ணிய போட்டுக்கிட்டு அட மூதேவி நீ தண்ணியப்போடு. ஆனா முதலமைச்சர் ஆகப்போறேன்னு சொல்லாத. முதலமைச்சர் சீட்டு என்ன மியூசிக்கல் சேரா?

அந்த சீட்டு என்ன சாதாரண சீட்டா? தண்ணியப்போட்டா என்ன வேணும்னாலும் பேசிட வேண்டியதா?

ஒருத்தன் கேட்டான் என்னய.. அவர எதிர்த்து நிக்கப்போறீங்கன்னு சொன்னீங்களே எதிர்த்து நிற்கப்போறீங்களான்னு.

ஒரு மேடையில் ஏறுனாலே ஸ்டடியா நிக்க முடியல. (ஆடிக்காட்டுகிறார்) இந்த ஆள எதிர்த்து நின்னா எனக்குத்தாங்க கேவலம். அதனால நான் ரிஜக்ட் பண் ணிட்டு மொத்த டீமையும் காலி செய்வது தான் என் வேலை.



அய்யா மன்னிசிக்குங்க என்று கலைஞரை பார்த்து சொல்லிவிட்டு... டேய் நீ முதலமைச்சர்னா நான் பிரதமர்... நீ பிரதமர்னா நான் ஜனாதிபதி... நீ ஜனாதிபதின்னா நான் ஒபாமா... என்று உரக்கக் சொன்னார். பலத்த ஆரவாரத்திற்கிடையே...

அந்த கட்சி பெயர் கூட வாயில் வரமாட்டேங்குது. நாக்கு மூக்காவா, மூக்கு முக்காவா, தேக்கு முக்கா ஏதோ சொல்றாங்க. முதல் அமைச்சர் என்று சொல்லிக்கொள்வதோடு அல்லாமல், 2 ரூபாய்க்கு ஒரு தொப்பியை வாங்கி தலையில் மாட்டிக்கொண்டு, அதேபோல் கண்ணாடி, கர்சிப் வாங்கி மாட்டிக்கிட்டு போஸ் கொடுக்கிறார். கறுப்பு எம்.ஜி.ஆர் என்று சொல்லிக்கொள்கிறார். நீங்கள் கறுப்பு எம்.ஜி.ஆர் என்றால் நான் கறுப்பு நேரு. கேப்டன் என்றால் என்னன்னு தெரியுமா? தண்ணியில மிதக்குற கப்பலை ஓட்டுகிறவர் பேர் தான் கேப்டன்... எந்நேரமும் தண்ணியிலயே மிதக்குறவனுக்கு பேர் கேப்டன் இல்லை... என்று இதையே இரண்டு முறை அழுத்தமாக சொன்னார்.

தொடர்ந்து சிங் மேக்கரா நீ... நீ டிரிங்க மேக்கர் என்றார்.

திருவாரூர் தெற்கு ரதவீதியில் தி.மு.க கூட்டணி தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் வடிவேலு இப்படி பேசியதைக் கேட்ட விஜயகாந்த கடுப்பாகி இருக்கிறாராம். விஜயகாந்த் வடிவேலு விவகாரம் பழைய கதை என்று பார்த்தால் இப்போது தான் ஸ்டார்ட் ஆகியிருக்கிறது.




## கசப்பான அனுபவம் தமன்னா வருத்தம்

இளகிய மனசு, தாராள குணம் கொண்டவர்தான் எனக்கு கணவராக வர வேண் டும் என்று நடிகை தமன்னா கூறியுள்ளார். தமிழ் சினிமாக்களை தவிர்த்துவிட்டு தெலுங்கு சினிமா பக்கம் கரை ஒதுங்கியிருக்கும் தங்க மங்கை தமன்னா , ஐதராபாத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் திருமணம் பற்றி கேள்வி கேட்டனர்.

அதற்கு பதில் அளித்த தமன்னா, இப்போதைக்கு திருமணம் செய்து கொள்ளும் திட்டமெல்லாம் இல்லை. நான் சின்னப் பொண்ணு 21 வயசுதான் ஆகிறது. ஆனால் எனக்கு கணவராக வருபவர் எப்படி இருக்கணும் என்று ஒரு கனவு இருக்கிறது. அவர் இளகிய மனம் படைத்தவராக இருக்க வேண்டும். தாராள குணம் கொண்டவராக இருக்கணும். என் ஆசைகளை விருப்பங்களைப் புரிந்து கொள்பவராக இருக்க வேண்டும்.

நான் சினிமாவுக்கு வந்த ஆரம்பத்தில் அப்பாவியாக இருந்தேன். இப்போது நிறைய படங்களில் நடித்து முடித்து சந்தோஷமாக இருக்கிறேன். எனக்கு கசப்பான அனுபவங்கள் உண்டு. ஏண்டா சினிமாவுக்கு வந்தோம் திரையுலகை விட்டு விலக வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு விரகத்தியான சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லை.

ஆனால் கடினமாக உழைத்தால் எதையும் பெறமுடியும். நடிகையான பின்னர் இயக்குநர் சொல்வதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். ஒவ்வொரு படத்தையும் புதிதாக செய்வது போல் உணர்கிறேன். எனக்கு இரவு நேரப் விருந்துகள் அறவே பிடிக்காது. தமிழில் இயக்குநர்கள் கவுதம், ராதாமோகன், சசிகுமார் படங்களில் நடிக்க ஆசை. நவீன உடைகளைவிட புடைவைதான் எனக்குப் பிடித்த உடை. இந்தியப் பெண்களுக்கு அதுதான் அழகு என்று கூறினார்.



## வரலாறு படைத்தது தோனி அன் கோ

# உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது இந்தியா
# களத்தடுப்பால் கோட்டை விட்டது இலங்கை

## மஹேல ஜெயவர்த்தன சதம் வீண்

(மும்பை)

அணித்தலைவர் தோனியின் துணிச்சலான ஆட்டத்தின் மூலம் இந்திய அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி வரலாறு படைத்தது.

மும்பையில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் களத்தடுப்பில் சொதப்பிய இலங்கை அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்றது.

இத்தொடரின் இறுதிப் போட்டி நேற்று மும்பை வான்கடே மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது.




**ராண்டீவிற்கு வாய்ப்பு**

காயத்திலிருந்து மீண்ட முரளிதரன் இலங்கை அணியில் இடம் பெற்றார். அரையிறுதிப் போட்டியில் விளையாடிய சாமரசில்வா, மத்யூஸ், மெண்டிஸ், ஹேரத் ஆகியோருக்குப் பதிலாக கபுகெதர, ராண்டீவ், குலசேகரா, பெரேரா ஆகியோர் இடம் பெற்றனர்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

**ஆரம்பம் சொதப்பல்**

இதனடிப்படையில் களமிறங்கிய இலங்கை அணிக்கு தரங்க-டில்சான் ஜோடி ஆரம்பம் வழங்கினர். இந்திய அணியின் சிறப்பான களத்தடுப்பினால் இந்த ஜோடி ஓட்டங்களைப் பெற போராடியது.

இதில் உபுல் தரங்க 20 பந்துகளில் 2 விக்கெட்டுக்களை எடுத்து சகீர் கானின் பந்தில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.



அடுத்து டில்சானுடன் இணைந்த சங்கக்கார பொறுப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 43 ஓட்டங்களைச் சேர்த்த போது திலகரட்ண டில்சான் 33 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்து இணைந்த சங்கக்கார-ஜெயவர்த்தன ஜோடி அனுபவ ஆட்டத்தின் மூலம் ஓட்டங்களைப் பெற இலங்கை அணி 24 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 67 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களை எடுத்து யுவராஜ் சிங்கின் சுழலில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சமரவீர நிதானமாக ஆட மறுமுனையில் மஹேல ஜெயவர்த்தன 49 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 57 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது திலான் சமரவீர 34 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 21 ஓட்டங்களையெடுத்து யுவராஜ் சிங்கின் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த கபுகெதரவை ஒரு ஓட்டத்துடன் சகீர்கான் வெளியேற்ற இலங்கை அணி 39.5 ஓவர்களில் 182 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்து தடுமாற்றம் கண்டது.

எனினும் மஹேல ஜெயவர்த்தனவுடன் இணைந்த குலசேகர சிறப்பாக ஆட இலங்கை அணி 43.3 ஓவர்களில் 200 ஓட்டங்களைத் தாண்டியது.

இந்த ஜோடி பவர் பிளே ஓவரில் ஓட்டங்களைக் குவித்தது. சகிர் கான் வீசிய 48 ஆவது ஓவரில் குலசேகர இமாலய சிக்ஸர் விளாசினார். மறுமுனையில் பவுண்டரி விளாசிய மஹேல ஜெயவர்த்தன 84 பந்துகளில் இத்தொடரில் தனது இரண்டாவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இதில் நுவான் குலசேகர 30 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 32 ஓட்டங்களை எடுத்து ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த திஷார பெரேரா 39 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் விளாசி அசத்தினார்.

இந்நிலையில் இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 274 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மஹேல ஜெயவர்த்தன 88 பந்துகளில் (13 பவுண்டரிகள் உட்பட) 103 ஓட்டங்களையும் திஷார பெரேரா 32 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர் கான் யுவராஜ் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

**மலிங்க மிரட்டல்**

பதிலுக்கு 50 ஓவர்களில் 276 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பத்திலேயே மலிங்க மிரட்டினார்.

மலிங்க வீசிய ஆட்டத்தின் முதலாவது ஓவரின் இரண்டாவது பந்தில் வீரேந்திர சேவாக் பூச்சியத்துடன் வெளியேறினார்.

அடுத்து குலசேகரவின் ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்து அசத்திய சச்சின் டெண்டுல்கர் 18 ஓட்டங்களுடன் மலிங்கவின் வேகத்தில் ஆட்டமிழக்க இந்திய அணி 6.1 ஓவர்களில் 31 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

**காம்பீருக்கு அதிர்ஷ்டம்**

தொடர்ந்து காம்பீருடன் இணைந்த ஹோலி சிறப்பாக ஆடினார். காம்பீர் பக்கம் அதிர்ஷ்டம் அதிகமாகவே இருந்தது.

காம்பீர் 30 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கொடுத்த பிடிவாய்ப்பை குலசேகரா கோட்டை விட்டார். பின் ரன்-அவுட் வாய்ப்பிலும் தப்பிய காம்பீர் 56 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஹோலி 49 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 35 ஓட்டங்களை எடுத்து டில்சானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் தோனி சிறப்பான ஆட்டத்தை வழங்கி இந்திய அணிக்கு கைகொடுத்தார்.

இதில் தோனி 52 பந்துகளில் அரைச்சதம் கடக்க இந்திய அணி 37.5 ஓவர்களில் 200 ஓட்டங்களைத் தொட்டது.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 109 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது கௌதம் காம்பீர் 122 பந்துகளில் (9 பவுண்டரிகள் உட்பட) 97 ஓட்டங்களை எடுத்து பெரேராவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய யுவராஜ் சிங் அபார ஆட்டத்தை வழங்கினார். மறுமுனையில் தோனி பவுண்டரிகள் விளாச இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

**வெற்றி அணித்தலைவர்**

குலசேகரா வீசிய ஓவரில் தோனி ஒரு சிக்ஸர் விளாச இந்திய அணி 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 277 ஓட்டங்களைக் குவித்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதன்மூலம் பத்தாவது உலகக் கிண்ணத்தை இந்திய அணி சுவீகரித்தது.

அத்துடன் 28 ஆண்டுகளின் பின் இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி வரலாறு படைத்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் தோனி 79 பந்துகளில் (8 பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் அடங்கலாக) 91 ஓட்டங்களையும், யுவராஜ் சிங் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.



பந்துவீச்சில் லசித் மலிங்க 2 விக்கெட்டுக்களையும், பெரேரா, டில்சான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த அணித் தலைவர் தோனி ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

தொடர் நாயகனாக இந்திய அணி வீரர் யுவராஜ்சிங் தெரிவானார்.

# சாமிமலையில் தீ விபத்து 22 வீடுகள் முற்றாக சேதம்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பார்க்ரோ தோட்டத்தில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற தீ விபத்தில் இந்தத் தோட்டத்தின் இரண்டாமிலக்க லயன் குடியிருப்பு முற்றாக எரிந்து சாம்பலாகியதில் 22 வீடுகள் எரிந்து முற்றாகச் சேதமடைந்துள்ளன. இதில் 32 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டபோது எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படாதபோதும் குடியிருப்பாளர்களின் உடைமைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறிப்படவில்லை. இத் தீ விபத்து தொடர்பாக இலங்கை மின்சாரசபையினரும், மஸ்கெலியா பொலிஸாரும் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தற்போது தோட்டத்தின் சனசமூக நிலையத்திலும் ஏனை இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அம்பகமுவ பிரதேச சபைத் தலைவர் வி.தினேஸ், பிரதேச சபை உறுப்பினர் சிவசுந்தரம் ஆகியோர் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர். (ச-5)

# இந்திய ரசிகர்கள் அநா...

பரவலாக இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இத் தாக்குதல்காரர்களிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக வெற்றியைக் கொண்டாடியவர்கள் சிதறியோடி அருகிலிருந்த வீடுகளில் அடைக்கலம் புகுந்து கொண்டதாக எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை அடைக்கலம் கொடுத்த சிலரும் தாக்குதலுக்கு உள்ளானதாக தெரிவிக்கப்பட்டது. (எ-1)

# உலகத்தமிழர் பேரவை...

கலாம் என்று நம்பப்படுவதாகவும் அந்த நாளேடு தெரிவித்துள்ளது. கடந்த 28ஆம் திகதி உலகத் தமிழர் பேரவை தலைவர் வண. இமானுவெல் அடிகளார் பிரித்தானியத் தமிழர் பேரவையைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன், உலகத்தமிழர் பேரவையின் அமெரிக்க பிரிவைச் சேர்ந்த ஜெயராஜ் ஆகியோர் அமெ ரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கை சந்தித்துப் பேசியிருந்தனர்.

நான்காவது கட்ட ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவது தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளியாகவுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றிருப்பதால் இலங்கை அரசு கடும் அதிர்ச்சியடைந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் அனைத்துலக போர் குற்ற விசாரணைகளுக்கு இலங்கையை சம்மதிக்க வைப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என்று இலங்கை அரசு கவலை கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச-5)

# ஜனாதிபதியின் பயணத்...

சர்லாந்தில் வசித்து வந்துள்ளார்.

அவரைப்பற்றியதகவல்கள் ஐரோப்பிய நாடொன்றின் புலனாய்வுத்துறையால் திரட்டப்பட்டு வந்துள்ளன.

அத்துடன் அவரது மரபணு மாதிரியும் பிரஸ்தாப புலனாய்வுத்துறையால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுவிட்சர்லாந்தில் இருந்து அண்மையில் பிரஸ்தாப நபர் நாட்டுக்கு வந்தபோது அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வுத்துறையினர் அறிவித்துள்ளனர்.

மேலும் அண்மைக்காலமாக அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயணங்களை மேற்கொள்ளும் விமானங்கள் தொடர்பில் தகவல்களைச் சேகரித்து வந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

ஆயினும் பிரஸ்தாப சந்தேக நபர் கைது செய்யப்பட்ட ஐரோப்பிய நாடு எது என்பது தொடர்பான விபரங்களை வெளியிட புலனாய்வுத்துறையினர் மறுத்துள்ளனர். (எ-1)

# ஐ.நா.அலுவலகத்தை...

நாயகம் பான் கீ. முனிடம் கையளிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கை கையளிக்கப்பட்டதும் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்தை இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் சில சக்திகள் முற்றுகையிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இந் நிபுணர்கள் குழுவை நியமித்த போது கொழும்பிலிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தை கடந்த வருடம் இலங்கையின் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் சிங்களத் தேசியவாதிகள் முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்குப் பாதகமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிலையில் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த ஒத்திகையை அதன் அதிகாரிகள் மேற்கொண்டதாக தெரியவருகின்றது. (ச-5)

# எந்தவொரு அமைச்...

எதிர்வரும் 07ம் திகதி நடைபெறவுள்ள அரசாங்கத்துடனான கலந்துரையாடலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் வனப்பாதுகாப்புக்கான அதிகாரத்தையும் கோரவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதற்கு முன்பே அவற்றை வழங்க முடியாது என்று ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்துள்ளார். பாதுகாப்புப்படை அதிகாரிகளும் பிரஸ்தாப அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்துக்கு அண்மையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள முயன்ற பாரதீய ஜனதாக்கட்சி முக்கியஸ்தர்கள் திருப்பி அனுப்பப்பட்டதை உதாரணமாகக் காட்டி பலாலி விமானத்தளத்தில் மத்திய அரசாங்க அமைச்சர்களுக்கும் அந்த நிலைவரலாம் என்று பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அத்துடன் மாகாண சபைகளுக்கு வனப் பாதுகாப்புக்கான அதிகாரம் வழங்கப்படும் போது முல்லைத்தீவு வனாந்திரத்தில் பாதுகாப்புத்தரப்பினருக்கு உட்பிரவேசிக்கவே முடியாத நிலையும் ஏற்படலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்களின் கருத்தைக் கவனத்திற் கொண்டே ஜனாதிபதி பிரஸ்தாப மறுப்பை வெளியிட்டுள்ளார். (ச-5)


## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் கௌரவ குடும்பத்தைச் சார்ந்த MA படித்த, 1970ல் பிறந்த கனடா வதிவிடத்தினையுடைய கல்வித்தகைமையுள்ள பெண்ணிற்கு படித்த மணமகன் தேவை. தற்சமயம் யாழில் நிற்கின்றார் (பத்து நாட்கள் மட்டும் யாழில் நிற்பார்)

தொடர்பு :- 222 0459, 0719709498 (4286)

## வீடு விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு மானிப்பாய் முச்சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள 3 பரப்பு காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. (மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து 1Kmக்கு உட்பட்ட பிரதேசம்.

தொடர்பு : T.P. : No :- 0779301745, 0776917155 (4290)



## விற்பனைக்கு

தொடர்புகளுக்கு

0722441441

RAZMI (C-2857)

## குமரகுரு மல்ரி சொப்

### வாடிக்கையாளர் கவனத்திற்கு

எமது குமரகுரு மல்ரி சொப் திறப்பு விழாவினை முன்னிட்டு மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டத்தினை அறிமுகம் செய்திருந்தோம். இதன்படி 01 ஆவது அதிர்ஷ்டசாலித் தெரிவு மதியம் 1.00 மணியளவில் தெரிவு செய்யப்பட்டு கீறோ கொண்டா மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது. மாலை 7.00 மணியளவில் தெரிவுசெய்யப்படவிருந்த 2 ஆவது அதிர்ஷ்டசாலித்தெரிவு தவிர்க்க முடியாத காரணத்தால் தெரிவுசெய்யப்படவில்லை. இவ் அதிர்ஷ்ட தெரிவு எதிர்வரும் 06.04.2011 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு எமது வாணிப முன்றலில் நடைபெறும் என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மன மகிழ்வுடன் தெரியப்படுத்துகின்றோம்.

No :-9, ஆனந்தபுரம், பிரதான வைத்தியசாலை முன்பாக, A9, றோட், கிளிநொச்சி. T.P: 0212285442

## STUDYING UK

### April 2011 Intake

ஏப்ரல் மாதத்தில் ஏற்பட இருக்கும் மாற்றத்திற்கு முன் மாணவர்கள் செல்வதற்கான அனுமதி பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

O/L அல்லாதவர்களுக்கும் LONDON செல்லும் ஓர் அரிய வாய்ப்பு

ENGLAND

லண்டன் விசாக்கள் 100% விசா உத்தரவாதம்

குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது.
IELTS தேவையில்லை, விசேட ஆங்கில பயிற்சி வழங்கப்படும்.
Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.
20 மணி நேர பகுதி நேர வேலைவாய்ப்பு உறுதி.

### கடைசியாக சென்றவர்களில் சிலர்:

S. Keerthiya, Urumpirai West, Urumpirai.
Lavakumaran. Wellvattithurai Jaffna
V. Vijitharan, Pointpedro Jaffna
Nanthagopal, Kokuvil Jaffna
Dinojkumar, Trincomalee
Vinson Amalathas, Pointpedro Jaffna
T. Kiruthikka, Kantharmadam Jaffna
A.J.Jackshan, Batticaloa
Jonis Amalraj, Pointpedro Jaffna
Mr. Aron Thusanth, Pointpedro Jaffna
R. Sanjeevan, Achuveli Jaffna
Asker Ali, Main Street Sammanthurai
V.Pushpakumar, Delf - Jaffna
Mr. A. Ravi, Nallur Jaffna
Miss. Bavatharani, Chavakacheri Jaffna
T.Asok Kumar, Adyapatham Jaffna
R.Dinesh, KKS Road Jaffna
Vikneswaran, Wattala Colombo
Mr. Skywin, Batticolla
J.I. Niroshini, Batticalloa
R.Riffan, Colombo-13
C. Staford, Colombo-13
Miss. Deffni, Negambo
Anoshanth, Jaffna
Krishnashanthy, Thunnalay Jaffna
M.Usaith, Sammanthurai
Rubamerikka, Vellvettithurai Jaffna
P. Mathu, Tillainagar Tricomelle

உறுதியான பயணம் உயர்வான கல்வி நிறைவான சேவை

Westminster International Institute of Higher Education

### WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES

No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
No. 23, Thamaraikeni Road, Batticaloa.
Telephone: 0213207778 - 0653064810 - 0113056888.
Hot line : 0771919192 - 0772229286

## வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை

01.04.2011 தொடக்கம் 15.04.2011 வரை
புத்தாண்டு விசேட சலுகை



72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

லண்டன் 1Kg 750 /=

கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், சுவிஸ், டென்மார்க்
ஜேர்மனி, இத்தாலி, நோர்வே
1Kg 900 /=

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 222 6113


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.